விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 047 வள்ளுவர் ஆண்டு 2056 தை 22 செவ்வாய்க்கிழமை (04.02.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## கரிநாள் போராட்டம்
## எழுவருக்கு மட்டக்களப்பு நீதிமன்றம் தடை

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் இன்று ஆர்ப்பாட்டம் அல்லது போராட்டங்களில் ஈடுபட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவர் உள்ளிட்ட எழுவருக்கு எதிராக 15

## ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரியாக கோட்டாவை அறிவிக்க அநுர அரசு சதி
### உதய கம்மன்பில குற்றச்சாட்டு

(கொழும்பு)
2019ஆம் ஆண்டு இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதலின் பிரதான தலைமைச் சூத்திர தாரியாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை அறிவித்து அவரைக் கைது செய்வதற்கான நகர்வுகளில் அரசு ஈடுபட்டுள்ளதாக உதய கம்மன்பில குற்றச்சாட்டியுள்ளார். 02



## இன்று 77ஆவது சுதந்திர தினம்
## சுதந்திர சதுக்கத்தில் விழா ஏற்பாடு

(கொழும்பு)
77வது சுதந்திர தின விழா இன்று காலை, சுதந்திர சதுக்கம் மற்றும் சுதந்திர பிரதேசத்தைமையமாகக்கொண்டு நடைபெறவுள்ளன.
இதையொட்டி ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.
அதன்படி, அங்கு வருபவர்கள் சோதிக்கப்பட்டு பின்னர் சுதந்திர 02

## சுதந்திர தின விழாவில் தமிழிலும் தேசிய கீதம்
### அநுர அரசு உறுதி

(கொழும்பு)
இலங்கையின் 77 ஆவது சுதந்திர தினத்தில் தமிழிலும் தேசிய கீதம் இசைக்கப்படும் என அநுர அரசு உறுதியளித்துள்ளது.
77ஆவது சுதந்திர தின நிகழ்வு 15

## போதை மாத்திரையுடன் இளைஞன் கைது

(வவுனியா)
வவுனியா - பெரியார்குளம் பகுதியில் போதை மாத்திரையுடன் நேற்று ஒருவர் வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் 15

# இலங்கையின் சுதந்திர தினம்
# தமிழ் மக்களின் கரிநாள்
## அறிக்கையிட்டன தமிழ் அமைப்புகள்

(யாழ்ப்பாணம்)
இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாக அனுஷ்டிக்குமாறு தமிழ் அமைப்புகள் அறைகூவல் விடுத்துள்ளதுடன், அது தொடர்பான போராட்டங்களிலும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளன.
(02ஆம் பக்கம் பார்க்க)

### எல்லை தாண்டிய மீன்பிடி
## 10 இந்திய மீனவர்களுக்கு 17ஆம் திகதிவரை மறியல்

(மன்னார்)
இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில் கைது செய்யப்பட்ட 10 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிமன்றம் நேற்று உத்தர 02

## இறக்குமதி கொள்கலன்கள் பரிசோதனையின்றி விடுவிப்பு
## விசாரிக்க குழு நியமனம்

(கொழும்பு)
323 இறக்குமதி கொள்கலன்களை சுங்கப் பரிசோதனையின்றி விடுவித்துள்ளதாக வெளியான தகவல் தொடர்பான விசாரணைகளுக்காக நிதியமைச்சினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. (ந-7)

## மன்னார் சூட்டுச் சம்பவம்
## மேலும் ஒருவர் யாழில் கைது

(யாழ்ப்பாணம்)
மன்னார் நீதிமன்றத்திற்கு முன்னால் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் ஒரு சந்தேக நபர் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் பெரியவிளான் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.
மன்னார் நொச்சிக்குளம் பகுதியைச் 15

### பதவியின் மகத்துவம் கருதி
## தேர்தல் பிரசாரங்களை தவிர்க்க அநுர முடிவு

(கொழும்பு)
உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரங்களில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கலந்து கொள்ளாமல் இருக்கத் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. 02

### அநுரவின் யாழ்.விஜயம்
## வெடித்தது புதிய சர்ச்சை
## தணித்தது பாதுகாப்பு அமைச்சு

(கொழும்பு)
ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் யாழுக்கான விஜயத்தின்போது விமானப் படைக்குச் சொந்தமான மூன்று ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. 15

## பொதுப் பாதுகாப்பு அமைச்சர் எம்.பி பதவி வகிக்கத் தகுதியற்றவர்
### பதவியை வறிதாக்கக் கோரி நீதிமன்றை நாடிய பெரமுன

(கொழும்பு)
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை செல்லுபடியற்றதாக்கி உத்தரவிடக் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
குறித்த மனுவை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் நிர்வாகச் 15

நடுவு நிலை தவறா நல்லெறி காக்கும் உங்கள் நாளிதழ்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின்...

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கம், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் உறவுகளின் சங்கம் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் உள்ளிட்ட பல்வேறு பொது அமைப்புகளும் தமிழ் அரசியல் தரப்புகளும் இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாக அனுஷ்டிக்குமாறு அழைப்பு விடுத்துள்ளன.

இது தொடர்பில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் தலைவர் அருட்பணி. து.ஜோசப்மேரி மற்றும் தலைமை ஒருங்கிணைப்பாளர் தவத்திரு வேலன் சுவாமிகள் விடுத்துள்ள கூட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி 4ஆம் திகதியினை இலங்கைத் தேசம் தமது சுதந்திர தினமாகக் கொண்டாடிவருகின்றது. ஆயினும் அன்றைய தினமே பறிக்கப்பட்ட தமிழர் தேசத்தின் இறையாண்மை, ஆங்கிலேயரிடமிருந்து சிங்கள பேரினவாதிகளுக்கு கைமாற்றப்பட்ட தினமாகும்.

வரலாற்றுரீதியாக இலங்கைத்தீவின் வடக்கு கிழக்கு பகுதிகள் ஒன்றிணைந்த பகுதிகள், இத்தீவின் மூத்த குடிகளான தமிழ் மக்களின் தாயக பூமியாக இருந்தது என்பதையும், அந்தத் தாயகபூமி இறையாண்மை உள்ள தனித்தேசமாக இருந்தது என்ற வரலாற்று உண்மையை மறுதலித்து எமது சுதந்திரம் சிங்கள தேசத்திடம் கையகப்படுத்தப்பட்ட நாளாகவே இந்நாள் உள்ளது. தேசிய மக்கள் சக்தி எனும் பெயரில் ஆட்சி ஏறியுள்ள சிங்கள அடிப்படைவாத கட்சி தம்மை மாற்றத்தின் நாயகர்களாக காட்ட முற்பட்டாலும் அவர்களின் உண்மை முகம் தொடர்ச்சியாக வெளிவந்துகொண்டே இருக்கின்றது..

என்றுமில்லாதவாறு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சி ஏறியவர்கள் இலங்கைத் தீவின் அதி உச்ச பிரச்சினையான தமிழ் மக்களின் இனப் பிரச்சினை தொடர்பாக எவ்வித அக்கறைகளுமின்றி, ஏன் அவ்வாறான ஒரு பிரச்சினையே இல்லை என்ற கோதாவிலேயே நடந்து வருகின்றனர்.

சிங்கள தேசத்தில் ஆட்சி மாறினாலும், சிங்கள பேரினவாத மூலோபாயம் மாறாது என்பதே நாம் கண்ட அனுபவ பாடம்.

அதைவிடுத்து இந்த ஆட்சியில் தீர்வு கிடைக்கும் என நம்புவோமேயானால் எம்மை போன்ற அரசியல் அறிவிலிகள் யாரும் இருக்க முடியாது. மேலும், இந்த அரசானது இலங்கையர் எனும் அடையாளத்தின் கீழ் தமிழ் மக்களின் தனித்துவத்தை அழித்து சிங்கள மேலாண்மையை நிறுவுவதில் மிகத்தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது. மேற்கூறிய விடயங்களை கருத்தில் கொண்டு வரும் ஸ்ரீலங்கா தேசத்தின் சுதந்திர தினத்தை தொடர்ச்சியாகத் தமிழர் தேசம் கரிநாளாக அனுசரித்தது போலவே இம்முறையும் அனுசரிக்க அறைகூவல் விடுக்கின்றோம் என்றுள்ளது. (ந-7)

## இன்று...

தின விழாவிற்கு அனுப்பப்படுவார்கள் என்று கூறிய ஊடகப் பேச்சாளர், சுதந்திர தின விழாவில் ஏராளமானோர் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறினார்.

இன்று விசேட போக்குவரத்துத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையில், சுதந்திர தின விழாவை காணவரும் பொதுமக்கள் பௌத்தலோக மாவத்தை வழியாக வந்து, பின்னர் ரூபவாஹினி வளாகத்திற்கு அருகில் சோதனை செய்யப்பட்டு ஆசனங்களுக்கு அனுப்பப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு இந்த ஆண்டு சுதந்திர தின விழாவை குறைந்த செலவில், பொதுமக்களுக்கு ஏற்படும் அழுத்தங்களை குறைத்து, அதிக பொது மக்களின் பங்கேற்புடன் நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இந்த ஆண்டு சுதந்திர தின விழாவிற்காக முப்படை உறுப்பினர்களின் எண்ணிக்கை 40 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளதுடன், அணிவகுப்புக்கு முப்படை கவச வாகனங்களைப் பயன்படுத்தாமல் இருப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.(ந-7)

# வர்த்தக நிலையங்களுக்கு வெளியில் பொருட்களைக் காட்சிப்படுத்தாதீர்கள்

## யாழ். நகர வர்த்தகர்களுக்கு அறிவுறுத்தல்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரில் வர்த்தக நிலையங்களுக்கு வெளியில் பொருட்களைக் காட்சிப்படுத்தியிருந்த வர்த்தகர்களுக்கு எதிராக பொலிஸாரால் எச்சரிக்கைத் துண்டுகள் விநியோகிக்கப்பட்டன. அத்துடன் போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பிலும் வர்த்தகர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டன.

தூய்மையான இலங்கைச் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக, யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஏற்பாட்டில் யாழ். நகரப் பகுதி வர்த்தகர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நடவடிக்கை நேற்று திங்கட்கிழமை (03) முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் யாழ். மாநகர சபை ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன், யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜயசிங்க, யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் சகர் ஜயமஹா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாண நகரிலுள்ள வர்த்தக நிலையங்களின் முன்பாக பொருட்களை வைத்து விற்பனை செய்ய வேண்டாம் எனவும், வர்த்தக நிலையத்தின் முன்பாகவுள்ள வடிகால்களை துப்புரவாக வைத்திருப்பது அந்தந்த வர்த்தக நிலைய உரிமையாளர்களின் பொறுப்பு எனவும் யாழ். மாநகர சபை ஆணையாளர் வர்த்தக நிலைய உரி மையாளர்களுக்குச் சுட்டிக்காட்டினார்.

வர்த்தக நிலையங்களில் குப்பைகளைச் சேர்த்து வைக் குமாறும் தினமும் இரு தடவைகள் யாழ். மாநகர சபையால் அவை பெற்றுக் கொள்ளப்படும் என்றும் வர்த்தகர்களுக்கு அறிவுறுத்தினார். அதேபோன்று வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக வாகனங்களை நிறுத்துவதை அனுமதிக்க வேண்டாம் எனப் பொலிஸார் அறிவுறுத்தினர்.

எதிர்காலத்தில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் கடைகளுக்குப் பொருட்களை இறக்குவதற்கான நேரத்தை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும், நகரின் சில வீதிகளை ஒருவழியாக்குவதற்கும் இதன் போது ஆலோசிக்கப்பட்டது.

மேலும், யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தை சூழவுள்ள பகுதிகளையும் வட க்கு மாகாண ஆளுநர் பார்வையிட்டார். பேருந்து நிலையத்தைச் சுற்றி உட்புறமாக அமைக்கப்பட்டுள்ள கடை களை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என ஆளுநர் இதன் போது குறிப்பிட்டார். (ந-7)

## மரண அறிவித்தல்

## மடுத்தீன் ஞானப்பு



மண்ணில் 05.04.1936 விண்ணில் 03.02.2025

புதுக்குடியிருப்பு 9ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஆனந்தபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மடுத்தீன் ஞானப்பு அவர்கள் நேற்று 03.02.2025 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுவானி மடுத்தீன் அவர்களின் மனைவியும் செபமாலை(கிளி), தேவதாஸ்(USA), புஸ்பராணி, அந்தோனிப்பிள்ளை (அன்ரன்), பிலோமினா, மேரிபுஸ்பம், சிலுவைராசா, தேவநேசம், அருட்பணி ம.பத்திநாதர் ஆகியோரின் அன்புத் தாயாரும் தங்கராசா, றீற்றம்மா(USA), அசோக்குமார், ஜெயவதி, யேசுராசா, காலஞ்சென்ற பிரான்சிஸ் குலாஸ்(ஜீவன்), ஜெயமலர், பொன்யேசு ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை 05.02.2025 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அருட்பணி ம.பத்திநாதர்(மகன்)
[பங்குத்தந்தை கோப்பாய்]
அருட்பணி அ.துஸ்யந்தன் (பேரன்)
[யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி]
T.P : 077 958 0531

தகவல்: குடும்பத்தினர்

(3319)

## 10 இந்திய...

விட்டது.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மன்னார் தெற்கு கடற்பரப்பில் இழுவைப் படகு ஒன்றில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 10 இந்திய மீனவர்களை நேற்று (3) அதிகாலை இலங்கை கடற்பரப்பில் வைத்து கடற்படையினர் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் தாழ்வுபாடு கடற்படை முகாமில் விசாரணைகளுக்குட்படுத்தப்பட்டதன் பின்னர் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளூடாக மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது மன்னார் பதில் நீதவான் குறித்த மீனவர்களை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ந-7)

## தேர்தல்...

ஜனாதிபதி என்ற பொதுவான பதவியில் இருந்துகொண்டு தேர்தல் பிரசார மேடையேறுவது பொருத்தமற்றது என்பதை ஜனாதிபதி ஆளுந்தரப்பின் உறுப்பினர்களிடம் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முன்னர் அனைத்து மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களிலும் மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் பொது மக்கள் கூட்டத்திலும் ஜனாதிபதி கலந்துகொள்ளவுள்ளார். (ந-7)

## ஈஸ்டர்..

இது குறித்து நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரசாங்கம் ஆரம்பத்தில் உண்மையான குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதாக உறுதியளித்தது.

எனினும் நிர்வாகத்தில் உள்ள சில நபர்கள் சம்பந்தப்பட்டிருப்பதால், பொதுமக்களைத் தவறாக வழிநடத்த ஒரு மாற்றுக் கதை உருவாக்கப்படுவதாக கம்மன்பில குற்றம் சாட்டினார்.

உண்மையிலேயே பொறுப்பானவர்கள் இன்னும் நிர்வாகத்திற்குள் இருப்பதால், ஒரு புதிய பிரதான சூத்திரதாரியை உருவாக்குவதற்கான திட்டத்தில் அரசாங்கம் இப்போது ஈடுபட்டுள்ளது.

இந்த முயற்சியின் ஒரு பகுதியாக முன்னாள் புலனாய்வுத் துறைத் தலைவர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே மற்றும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் குறிவைக்கப்படுகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நன்மை பயக்கும் வகையில் இலங்கையின் புலனாய்வுப் பிரிவு ஈஸ்டர் குண்டுவெடிப்புகளைச் செய்தது என்ற தவறான கூற்றை நிறுவுவதே இதன் நோக்கம்.

உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி, விமானப்படையின் முன்னாள் தளபதி மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி ஆகியோர் உள்ளிட்ட மூவர் கொண்ட ஜனாதிபதி விசாரணைக் குழுவை மேற்கோள் காட்டிய கம்பன்பில இலங்கையின் புலனாய்வு அமைப்புகளைக் குண்டுத் தாக்குதல்களுடன் இணைக்கும் வகையில் இங்கிலாந்தைச் சேர்ந்த சனல் 4 ஆவணப்படம் முன் வைத்த குற்றச்சாட்டுக்களை நிராகரித்துள்ளது என சுட்டிக் காட்டினார். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தனி நாடே எங்கள் தாகம்'

(நேற்றைய தொடர்ச்சி)

அந்தப் பணத்தை வங்கியிலிருந்து எடுப்பதற்கு கிட்டு என்னிடம் உதவி கோரினார். "ஒரு நேரத்தில் ஒரு கோடி மட்டும் எடுங்கள். நீங்கள் வங்கி செல்லும் போது உங்களுடன் எனது உதவியாளரை அனுப்புகிறேன். பிரச்சினை ஏதும் வராமல் அவர் பார்த்துக் கொள்வார்" என்று கூறினேன். என் வழிகாட்டுதலின்படி அவர்கள் மூன்று கோடி ரூபாய் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் எடுத்துச் சென்றனர்.

ஆனால் நான்காவது முறை என்னிடம் சொல்லாமலே அவர்களாகப் போய் பணம் எடுக்க முயன்றனர். தலைமைச் செயலகத்திற்கு அருகில் உள்ள வங்கியின் முன் அவர்கள் காரில் சென்று இறங்கும் போது வாகனத்தில் இருந்த துப்பாக்கியை அவர்கள் மறைத்து வைக்காததால் அதைப் பார்த்த யாரோ ஒருவர், 'வங்கியைக் கொள்ளையடிக்க வந்திருக்கிறார்கள் என்று காவல்துறைக் கட்டுப்பாட்டு அறைக்குத் தொலைபேசி மூலம் தகவல் தந்துவிட, அது சிறிய குழப்பத்தை உண்டாக்கியது.




**எங்களுடைய விடுதலைப் போராட்டம், இந்த ஒப்பந்தத்தின் மூலம் வீணாகப் போய்விட்டது. தமிழீழம் ஒன்றே எங்களது தாகம், அதை அடையும் வரை போராடுவோம். ஒப்பந்தத்தின்படி, ஆயுதங்களை எல்லாம் இந்திய இராணுவத்திடம் ஒப்படைத்துவிட்டு, நாங்கள் இந்தியாவிடம் கையேந்தி நிற்க வேண்டும். இந்திய நலன் ஒன்றையே கருத்தில் கொண்டு இந்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டுள்ளது. எனவே இந்திய நலனைக் கருத்தில் கொண்டு நாங்கள் ஒத்துழைக்கத் தயாராய் இருக்கிறோம்".**

மறுநாள் நாளிதழ்களில் அது செய்தியாகிப் பரபரப்பானது. கிட்டு என்னிடம் தகவல் தராமல் வங்கிக்குச் சென்றதற்காக பலமுறை மன்னிப்புக் கோரினார். ஆனால், அவர்கள் எனக்குப் பிரச்சினையை உண்டாக்கவில்லை. மாறாக, தமிழ்நாட்டு அரசு முதல்வருக்குப் பிரச்சினையை உருவாக்கி விட்டார்கள். அது அரசுப் பணம். அதை எப்படி ஒரு போராளிக் குழுவுக்கு மட்டும் கொடுக்கலாம் என்று கேள்வி எழுப்பப்பட்டது. ஆனால், அதையெல்லாம் எம்.ஜி.ஆர் கண்டு கொள்ளவில்லை.

**"ஒப்பந்தம் மூலம் புலிகளின் போராட்டம் வீணானது!"**

இந்திய- இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தானதும் சுமார் ஒரு லட்சம் இந்திய ராணுவத்தினர் விமானம் மூலமும் கப்பல் மூலமும் இலங்கைக்குச் சென்று இறங்கினர். பிரபாகரன் ஒப்பந்த எதிர்ப்பில் உறுதியாக இருந்தார். அவர் கைது செய்யப்பட்டு டில்லியில் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்று வதந்தி பரவியதால் தமிழீழப் பகுதிகளில் ஈழ மக்கள் இந்திய இராணுவத்திற்கு எதிராக மறியல் செய்யத் தொடங்கினர். விடுதலைப்புலிகளின் இரண்டாம் நிலைத் தலைவர்கள் "பிரபாகரன் உடனடியாக ஈழம் வரவேண்டும் இல்லையேல், இராணுவத்திற்கும் ஏனைய நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு தர இயலாது" என்று கூறிவிட்டனர். எனவே இராணுவம் 'பிரபாகரன் துணையின்றி அமைதிப் படை செயற்படுவது சற்றுக் கடினம்" என்று இந்திய அரசிடம் கூறி, பிரபாகரனை இலங்கைக்குக் கொண்டுவரக் கோரியது.

1987 ஜூலை 24 அன்று பிரபாகரன் டில்லியிலிருந்து தனி விமானத்தில் சென்னை வந்திறங்கினார். தாம்பரம் இராணுவ விமான நிலையத்தில் நான் மட்டுமே சென்று அவரை வரவேற்றேன். அவர் கறுப்புப் பூனைகள் என்று அழைக்கப்பட்ட (NSG) தேசிய பாதுகாப்புக் குழுவினால் பாதுகாக்கப்பட்டிருந்தார். அதனால் ஒரு மேஜர் மற்றும் நான்கு துப்பாக்கி ஏந்திய பாதுகாவலர்களுடன் வந்தார் பிரபாகரன். என்னைக் கண்டதும் நேராக நடந்து வந்து எனது காரில் ஏறிக்கொண்டார். பிரபாகரனுடன் பூனைப்படை மேஜர் மட்டும் எனது வாகனத்தில் ஏறிக் கொள்ள, மற்றவர்கள் வேறு வாகனத்தில் ஏறிக்கொண்டனர். அப்போது அந்த மேஜர், "நாம் எங்கே போகிறோம்?" என்று ஆங்கிலத்தில் கேட்டார்.

ஏனெனில் பிரபாகரன் யாழ்ப்பாணம் செல்வதற்காக ஒரு ஹெலிகொப்டர் தயாராக இருந்தது. அதைத் தவிர்த்துவிட்டு எனது காரில் அவர் ஏறியவுடன் அவர்களுக்குப் பதற்றம்.

அதற்கு நான், "அவரின் மனைவி, மக்கள் எல்லோரும் அவர்களது வீட்டில் இருக்கிறார்கள். அவர்களையும் அழைத்துக்கொண்டு அப்புறம் நீங்கள் யாழ்ப்பாணம் செல்லலாம்" என்று கூறியவுடன் அவரது பதற்றம் குறைந்தது. நேராகப் பிரபாகரனின் மனைவி, மக்கள் வசிக்குமிடம் சென்றோம். அருகிலேயே நான் குடியிருந்த வீடு திருவான்மியூரில் கிட்டுவும், சில போராளிகளும் அந்தப் பகுதியிலேயே வாழ்ந்துவந்தார்கள். அவர்களையெல்லாம் கண்டு, பேசி அன்று மதிய உணவை எனது வீட்டில் முடித்துக் கொண்டு, பிரபாகரன் தன் மனைவி மதிவதனி, மகன் சார்லஸ், மகள் துவாரகா ஆகியோருடன் புறப்பட்டார்.

அவருடன் பேசுவதற்கு எனக்கு அரை மணி நேரம் கிடைத்தது. 'எங்களுடைய விடுதலைப் போராட்டம் இந்த ஒப்பந்தத்தின் மூலம் வீணாகப் போய்விட்டது. தமிழீழம் ஒன்றே எங்களது தாகம். அதை அடையும் வரை போராடுவோம். ஒப்பந்தத்தின்படி, ஆயுதங்களை எல்லாம் இந்திய இராணுவத்திடம் ஒப்படைத்துவிட்டு நாங்கள் இந்தியாவிடம் கையேந்தி நிற்க வேண்டும். இந்திய நலன் ஒன்றையே கருத்தில் கொண்டு இந்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டுள்ளது. எனவே இந்திய நலனைக் கருத்தில் கொண்டு நாங்கள் ஒத்துழைக்கத் தயாராய் இருக்கிறோம் என்று கூறிவிட்டுத் தாம்பரம் விமான நிலையம் வந்து அங்கு அவருக்காகக் காத்துக் கொண்டிருந்த ஹெலிகொப்டரில் ஏறி சுதுமலை சென்றார். அவர் அங்கு இறங்கியவுடன் பேசியது, தமிழ் மக்களிடையே 'சுதுமலைப் பிரகடனம்' என்று பேசப்படுகிறது.

**சிறையில் விடுதலைப் புலிகள்!**

திலீபன் உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்ததும் இந்திய இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே போர் மூண்டது. அதைத் தொடர்ந்து தமிழகத்தில் தங்கியிருந்த விடுதலைப் புலிகள் கைது செய்யப்பட்டனர். விடுதலைப் புலிகளின் சென்னை நகரத் தலைமைப் பொறுப்பில் இருந்த கிட்டு மற்றும் 47 பேர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டபோது அவர்கள் என்னிடம் 18 சயனைட் குப்பிகளை ஒப்படைத்தனர். அது அவர்கள் என்மீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

சிறையில் அடைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகள் திடீரென்று "எங்களை எங்கள் மண்ணிற்கு அனுப்பி விடுங்கள்" என்று வேண்டினர். அவர்களது வேண்டுகோள் தமிழ்நாட்டு ஆளுநர் மூலம் ஒன்றிய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது. ஒன்றிய அரசிடம் இருந்து ஒரு வார காலம் பதில் வராததால், விடுதலைப் புலிகள் சிறைக்குள்ளேயே உண்ணாவிரதப் போராட்டத்தை அறிவித்தனர். உடனே, ஒன்றிய அரசு அவர்களைச் சிறையிலிருந்து விடுவித்து இலங்கைக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டது.

விடுதலை செய்யப்பட்ட அவர்களை இந்திய இராணுவ விமானத்தில் கூட்டிச் சென்று பாதுகாப்பாக இலங்கையில் இறக்கி விட்டேன்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாத இராசிபலன்கள்-2025

## உற்சாகமாக காணப்படுவீர்கள்



**கிரகநிலை**

சுக ஸ்தானத்தில் சூரியன், புதன் - பஞ்சம ஸ்தானத்தில் சனி - ரண ருண ரோக ஸ்தானத்தில் சுக்கிரன், ராகு - அஷ்டம ஸ்தானத்தில் குரு(வ) - பாக்கிய ஸ்தானத்தில் செவ்வாய்(வ) - அயன சயன போக ஸ்தானத்தில் கேது என கிரகநிலை உள்ளது.

**கிரகமாற்றங்கள்:** 05.02.2025 அன்று சுக ஸ்தானத்தில் இருந்து புதன் பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 11.02.2025 அன்று அஷ்டம ஸ்தானத்தில் குரு வக்கிரம் நிவர்த்தி ஆகிறார். 12.02.2025 அன்று சுக ஸ்தானத்தில் இருந்து சூரியன் பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 21.02.2025 அன்று பாக்கிய ஸ்தானத்தில் செவ்வாய் வக்கிரம் நிவர்த்தி ஆகிறார். 26.02.2025 அன்று தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து புதன் சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** நீங்கள் எங்கு சென்றாலும் உங்களுக்கு உதவ உள்ளங்கள் இருக்கும். இந்த மாதம் இராசிநாதன் சுக்கிரன் மறைந்திருந்தாலும் உச்சமாக இருப்பதன் மூலம் மனம் மகிழும் சம்பவங்கள் உண்டாகும். செவ்வாய் சஞ்சாரத்தால் மனநிம்மதியும், மனோதிடமும் உண்டாகும். தெளிவான சிந்தனையுடன் எதிலும் ஈடுபடுவீர்கள். முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். உற்சாகமாகக் காணப்படுவீர்கள். திடீர் செலவு உண்டாகும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை.

தொழில் வியாபாரத்தில் இருந்த தடைகள் நீங்கும். போட்டிகள் குறையும். பழைய பாக்கிகளை வசூலிப்பதில் வேகம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தெளிவாக சிந்தித்து எதையும் வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். சூரியன் சஞ்சாரத்தால் புதிய பதவிகள் கிடைக்கும்.

குடும்ப ஸ்தானத்தை குருவும் சனியும் பார்க்கிறார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியும், உற்சாகமும் காணப்படும். கணவன், மனைவிக்கிடையில் இருந்த பிரச்சினைகள் தீரும். பிள்ளைகள் பற்றிய கவலைகள் நீங்கும். உறவினர் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பெண்களுக்கு முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். காரியங்களை செய்து முடிப்பதில் திறமை வெளிப்படும். பணவரத்து கூடும்.

கலைத்துறையினருக்கு அனுசரித்து செல்வது நல்லது. மனக்கவலை உண்டாகும். வீண் அலைச்சலும் அதனால் சரியான நேரத்திற்கு உணவு உண்ண முடியாமலும் போகலாம். எதிலும் கவனமாக செயற்படுவது நல்லது. உடல் சோர்வு உண்டாகலாம். வீண் அலைச்சலைத் தவிர்த்து வேலையில் கவனம் செலுத்துவது நல்லது. அரசியல்துறையினருக்கு முன்னேற்றம் காணப்படும். அதே நேரத்தில் பல தடைகளைத் தாண்டி செயற்பட வேண்டி இருக்கும்.

எதிர்பார்த்த இலாபம் வரும். செயற்

### துலாம்



சித்திரை 3,4-ம் பாதம்
சுவாதி, விசாகம் 1,2,3-ம் பாதம்

திறமை வெளிப்படும். சுதந்திரமாக செயற்படும் வாய்ப்பு கிடைக்கும். வரவேண்டிய பணம் வந்து சேரும். மாணவர்களுக்கு கல்வியில் நினைத்ததை விட கூடுதல் பாடங்களை படிக்க வேண்டி இருக்கும். மனம் தளராது செயற்பட்டால் வெற்றி கிடைக்கும்.

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள்:** இந்த மாதம் எடுத்த காரியங்களில் சாதகமான போக்குக் காணப்படும். மங்கள நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள நேரிடும். வெளியூர் பயணம் செல்ல வேண்டியிருக்கும். பிரிந்து சென்ற

| | | | |
|---|---|---|---|
| சுக்கி ராகு | | குரு(வ) | செவ்(வ) |
| சனி | ராசி 05.02 – புத – கும் 11.02 – குரு – வநி 12.02 – சூரி – கும் 21.02 – செ – வநி 26.02 – புத – மீன | | |
| சூர் புதன் | | | |
| | | | கேது |

நண்பர்கள் மீண்டும் வந்து சேர்வார்கள்.

**சுவாதி:** இந்த மாதம் மன அமைதி கிடைக்கும். காரியத் தடைகள் விலகும். விருப்பங்கள் கைகூடும். மரியாதையும் அந்தஸ்தும் அதிகரிக்கும். பயன்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள். எதிர்பாராமல் நடக்கும் சம்பவங்கள் மூலம் நன்மை உண்டாகும்.

**விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் மனகுழப்பம் நீங்கி தெளிவு பெறுவீர்கள். எதிர்பாலினரால் காரிய அனுகூலம் ஏற்படும். எதிலும் எச்சரிக்கையாக செயற்படுவது நல்லது. தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். புதிய ஓடர்கள் வந்து சேரும். பழைய பாக்கிகள் வசூலிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**பரிகாரம்:** துர்க்கை அம்மனை வணங்க காரிய அனுகூலம் உண்டாகும். மனக்கவலை தீரும்.

**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், புதன், வெள்ளி.

**சந்திராஷ்டம தினங்கள்:** 6, 7, 8.

**அதிஷ்ட தினங்கள்:** 1, 27, 28.

## எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்



**கிரகநிலை**

தைரிய வீரிய ஸ்தானத்தில் சூரியன், புதன் - சுக ஸ்தானத்தில் சனி - பஞ்சம ஸ்தானத்தில் சுக்கிரன், ராகு - களத்திர ஸ்தானத்தில் குரு (வ) - அஷ்டம ஆயுள் ஸ்தானத்தில் செவ்வாய்(வ) - லாப ஸ்தானத்தில் கேது என கிரகநிலை உள்ளது.

**கிரகமாற்றங்கள்:** 05.02.2025 அன்று தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து புதன் சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 11.02.2025 அன்று களத்திர ஸ்தானத்தில் குரு வக்கிரம் நிவர்த்தி ஆகிறார். 02.02.2025 அன்று தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து சூரியன் சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 21.02.2025 அன்று அஷ்டம ஸ்தானத்தில் செவ்வாய் வக்கிரம் நிவர்த்தி ஆகிறார். 26.02.2025 அன்று தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து புதன் தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** நீங்கள் கொடுத்த வேலைகளை கன கச்சிதமாக முடிப்பதில் சிறந்தவர். இந்த மாதம் எதிர்பார்த்த பணவரத்து வந்து சேரும். இராசியில் இருக்கும் வக்கிரசனியால் மன நிம்மதி குறையலாம். வீண் பிரச்சினைகளை சந்திக்க வேண்டி இருக்கும். எனவே கவனமாக எதிலும் ஈடுபடுவது நல்லது. அதேவேளையில் இராசிநாதனின் சஞ்சாரத்தால் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். எந்தக் காரியத்தையும் ஆராய்ந்து பார்த்து செய்வது நல்லது.

தொழில் ஸ்தானாதிபதி சூரியன் அவரது ஸ்தானத்தை அவரே பார்ப்பதால் யோகம். தொழில் வியாபாரத்தில் வீண் அலைச்சலும், பண விரயமும் அகலும். புதிய ஓடர்கள் கிடைப்பது துரிதமாகும். மனதில் வியாபாரம் பற்றிய கவலைகள் அகலும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக பணிகளை கூடுதல் கவனமுடன் செய்வது நல்லது.

குடும்பத்தில் நிம்மதி குறையும் படியான சூழ்நிலை உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம். பிள்ளைகள் நலனில் அக்கறை காண்பீர்கள். உடல் களைப்பும் சோர்வும் உண்டாகலாம். கவனமாக இருப்பது நல்லது. பெண்கள் எந்தக் காரியத்தில் ஈடுபடும் போதும் யோசித்து செயற்படுவது நல்லது. வீண் அலைச்சல் ஏற்படலாம். செலவு கூடும்.

கலைத்துறையினருக்கு பிரச்சினை குறையும். பேசி எடுக்கும் முடிவுகள் நன்மை தரும். அடுத்தவர்களுக்காக எந்த பொறுப்பையும் ஏற்காமல் இருப்பது நல்லது. வழக்கத்தை விடக் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். பொருள் வரத்து கூடும். பயணம் செல்ல நேரலாம். அரசியல் துறையினருக்கு வீண் அலைச்சல், காரிய தாமதம் போன்றவை ஏற்படலாம்.

### விருச்சிகம்



விசாகம் 4-ம் பாதம்
அனுஷம், கேட்டை

புதிய முயற்சிகளைத் தள்ளி போடுவதும் நல்லது. காரிய அனுகூலம் ஏற்படும். உணர்ச்சிகரமாகப் பேசி மற்றவர்களை கவர்வீர்கள். எல்லாவற்றிலும் எதிர்பார்த்த நன்மை உண்டாகும். பணவரத்து கூடும். மாணவர்களுக்கு விளையாட்டில் ஆர்வம் உண்டாகும். பாடங்களை கவனமாகப் படிப்பது முன்னேற்றத்துக்கு உதவும்.

**விசாகம் 4 ஆம் பாதம்:** இந்த மாதம் உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளுடன் அனுசரித்து செல்வது நன்மை தரும். புதியவேலை

| | | | |
|---|---|---|---|
| சுக்கி ராகு | | குரு(வ) | செவ்(வ) |
| சனி | ராசி 05.02 – புத – கும் 11.02 – குரு – வநி 12.02 – சூரி – கும் 21.02 – செ – வநி 26.02 – புத – மீன | | |
| சூர் புதன் | | | |
| | | | கேது |

தேடுபவர்களுக்கு அலைச்சல் இருக்கும். குடும்பத்தில் அமைதி காணப்படும். கணவன், மனைவிக்கிடையே சகஜ நிலை இருக்கும். பிள்ளைகள் கல்வி தொடர்பான விடயங்களில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. உறவினர்கள் வருகை இருக்கும்.

**அனுஷம்:** இந்த மாதம் உங்களது ஆலோசனையை கேட்டு சிலர் வரலாம். உங்களது செயல்கள் மூலம் மதிப்பு கூடும். பணவரத்து திருப்திதரும். வீண் அலைச்சலை தவிர்ப்பது நல்லது. காரிய தடைகள் நீங்கும். எல்லாவகையிலும் நற்பலனே ஏற்படும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள்.

**கேட்டை:** இந்த மாதம் ஆன்மிக எண்ணங்கள் அதிகரிக்கும். உங்களது செயல்கள் மூலம் புகழ் கிடைக்கும். எதிர்பாராமல் நடக்கும் திருப்பங்களால் சாதகமான பலன் கிடைக்கும். பயணங்கள் செல்ல நேரலாம்.

**பரிகாரம்:** முருக கடவுளை வணங்க எல்லாவற்றிலும் நன்மை உண்டாகும். குடும்பத்தில் அமைதி உண்டாகும்.

**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், செவ்வாய், வெள்ளி.

**சந்திராஷ்டம தினங்கள்:** 9, 10.

**அதிஷ்ட தினங்கள்:** 2, 3.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிவபூமி அறக்கட்டளையால் மாவிட்டபுரத்தில் நிர்மாணிக்கப்பட்ட திருக்குறள் வளாகத்தை இந்திய உச்ச நீதிமன்ற நீதியரசர் ஏ.மகாதேவன் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

# சந்தையில் உச்சம் தொட்ட பச்சை மிளகாயின் விலை

(கொழும்பு)

சந்தையில் பச்சை மிளகாயின் விலை சடுதியாக அதிகரித்துள்ளதாக சந்தை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், ஒரு கிலோ பச்சை மிளகாய் ரூபா 1200 முதல் ரூபா 1400 வரையில் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் மரக்கறி வியாபாரிகள், அனைத்து பகுதிகளிலும் பச்சை மிளகாயின் விலை கணிசமாக அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனால் மக்களின் கொள்வனவு குறைந்துள்ளதாக சுட்டிக்காட்டிய அவர்கள் வியாபார நடவடிக்கைகளும் தடையுறுவதாக கவலை தெரிவித்துள்ளனர்.

மிளகாய் விலை அதிகரிப்பால், மிளகாய் விற்பனையும் கடுமையாகக் குறைந்துள்ளதாகவும் இந்தச் சூழ்நிலைகளால் நுகர்வோரும் தாங்களும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகவும் வியாபாரிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)



குருநகர் புதுமை மாதா ஆலயத் திருவிழா நேற்று முன்தினம் யாழ். மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிர் அழிவு தொடர்பில் மதிப்பீட்டு பணிகள் முன்னெடுப்பு

## கிளி.மாவட்ட அரச அதிபர்



(தருமபுரம்)

கிளிநொச்சியில் நிலவிய சீரற்ற கால நிலையால் நெற்செய்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளின் பயிர் அழிவு தொடர்பாக நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த பெரும்போகத்தில் அண் ணளவாக எழுபது ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பில் நெற்செய்கை மேற்கொள் ளப்பட் டது.

கடந்த வருட இறுதி மற்றும் இவ்வருட ஆரம்பத்தில் நிலவிய சீரற்ற கால நிலையினால் நெற்செய்கை அழிவு நிலைக்கு சென்றுள்ளன.

அந்த வகையில் மழை வீழ்ச்சி மற்றும் சீரற்ற காலநிலையினால் எமது மாவட்டத்தின் பெரிய குளமான இரணைமடுக்குளம் நான்கு அல்லது ஐந்து தடவைகளுக்கு மேல் வான்பாய்ந்திருந்தது.

இதன் காரணமாகவும் நெற்செய்கை பெரிதும் பாதிப்படைந்தது.

இந்நிலையில் இதனை மதிப்பிடும் முகமாக கமநல காப்புறுதி சபை, பிரதேச செயகம், விவசாயத் திணைக்களம் ஆகியன இணைந்து மதிப்பீட்டுப் பணிகளை முன்னெடுத்துள்ளனர்.

இவை நேர அட்டவணையின் பிரகாரம் கிளிநொச்சி மாவட்டத்தின் சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

எனவே, மழை காரணமாக பாதிக்கப்பட்ட நெற்செய்கை விவசாயிகள் விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தி குறித்த குழுவினருக்கு சமர்ப்பிக்குமாறு அவர் மேலும் தெரிவித்தார். (6-8-316)

# "இந்துக்களின் சமர்" யாழ்.இந்துவில் 7 ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)

கொழும்பு இந்துக்கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிகளுக்கிடையே நடத்தப்பட்டு வரும் "இந்துக்களின் சமர்" என வர்ணிக்கப்படும் வருடாந்த கிரிக்கெட் போட்டியானது எதிர்வரும் 7ஆம் மற்றும் 8 ஆம் திகதிகளில் யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பான விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு கடந்த வெள்ளிக்கிழமை மாலை கொழும்பு தமிழ் யூனியன் விளையாட்டுக் கழகத்தின் பி. சாரா சர்வதேச விளையாட்டரங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இந்துக்களின் பெருஞ் சமரின் பிரதான அனுசரணையாளரான ஜனசக்தி குழுமத்தின் நிறுவனரும், தலைவருமான சந்திரா ஷாப்டர் மற்றும் குழுமத்தின் தலைமை சந்தைப்படுத்தல் அதிகாரி சாமிக்க டி சில்வா ஆகியோர் அனுசரணையாளர்களாகவும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சார்பாக பழைய மாணவ சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி வசந்தன், கிரிசாந்த் மற்றும் சுலக்ஷன் ஆகியோரும், இந்துக் கல்லூரி கொழும்பு சார்பாக பழைய மாணவ சங்கத்தை பிரதி நிதித்துவப்படுத்தி இளங்கோ ரத்ன சபாபதி, அருள்மொழி மற்றும் நவக்குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் இறுதியில் பிரதான அனுசரணையாளரான ஜனசக்தி குழுமத்தினால் அனுசரணைக்கான காசோலையும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# தேரடிச் சித்தரின் குருபூசை

(யாழ்ப்பாணம்)

தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குரு பூசைத் தினம் இன்று காலை 9 மணிக்கு யாழ். நல்லூரில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் இடம்பெறவுள்ளது.

திருமுறை நற்சிந்தனைப் பாடல்களைத் தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு திருமுறைகளின் மகிமை பற்றி பண்டிதர் தி.மனோஜ்குமார் உரையாற்றவுள்ளார். (6-8)

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

**சந்தைக்கடைகள் வாடகைக்கு வழங்குவதற்கான (03 வருடங்கள்) கேள்வி அறிவித்தல்–2025**

2025.01.24, 2025.01.25 ஆம் திகதிய வலம்புரி, தினக்குரல் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட எமது சபைக் கடைகளுக்கான இரண்டு கேள்வி அறிவித்தல்களிலும் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு மேலதிகமானது.

ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கடைகளுக்கு விண்ணப்பிக்கலாம் ஆனால் ஒருவருக்கு ஒரு கடை மாத்திரம் சபையால் வாடகைக்கு வழங்கமுடியும். கேள்வி திறத்தலின் போது ஒருவர் ஒன்றிற்கு மேற்பட்ட கடைகள் பெற்றுக் கொள்வதற்கு தகுதிபெறுமிடத்து குறித்த நபர் விண்ணப்பிக்க கூடிய கேள்வித்தொகைக்குரிய கடையே சபையால் வாடகைக்கு வழங்கப்படும்.

கணேசன் கம்ஸநாதன், செயலாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி.

(C-2189)

# கண்ணீர் அஞ்சலி

அமரர்.

**லூசியா இராசமணி சூசைப்பிள்ளை**



தோற்றம் 08.01.1953 மறைவு 03.02.2025

நேற்று வரை எம்முடன் அருகில் இருந்த
நீங்கள் இன்று மாயமாய் மறைந்ததேனோ...
உம் பரிவான குணமும்
பண்பான பேச்சும் இனி என்று
நாம் காண்போம்?
உங்களின் ஆத்மா இளைப்பாற
பிரார்த்திக்கின்றோம்.

(809)

தொடர்புகளுக்கு:- 077 772 3283
075 285 0692

பிரிவில் துயர் கொள்ளும் குடும்பத்தினர்.

# இராசிபலன்

04.02.2025
தை 22 , செவ்வாய்க்கிழமை
சஷ்டி முற்பகல் 8.04 மணிவரை
சப்தமி பின்னிரவு 12.58 மணிவரை

சுபநேரம் 11.05-12.35 மணிவரை
இராகுகாலம் 3.35-5.05 மணிவரை
ரத சப்தமி, அமிர்தசித்தம்

சந்திராஷ்டமம்.
உத்தரம், அத்தம்.

வளவன்

**மேஷம்** எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கும், கனவுப் பலிதமுண்டு, பணியில் சிறு மனஉளைச்சல் ஏற்படலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**ரிஷபம்** சேமிப்பில் சிறிது கரையலாம், பயணங்களால் பலனுண்டு, தொழில் ரீதியான மாற்றங்கள் ஏற்படலாம், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**கடகம்** உங்களின் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், உற்சாகமான நாள்.

**சிம்மம்** தொழிலில் ஏட்டிக்குப் போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர் பேச்சில் இனிமை தென்படும், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், எதிர்கால நலனில் அக்கறை கூடும்.

**கன்னி** குடும்பப் பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், வாகனப் பழுதுச்செலவுகள் ஏற்படலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் அவசியம்.

**துலாம்** குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், வெளியூர்ப் பயணங்களால் நன்மையுண்டு, சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், கௌரவமான நாள்.

**விருச்சிகம்** திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு** கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், இல்லத்தில் இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், விருந்துகளில் கலந்துகொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கும்பம்** பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், குடும்பப் பொறுப்புக்கள் கூடும், முயற்சிகளில் முத்தான வெற்றிகள் கிடைக்கும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**மீனம்** எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், வாக்கு மேன்மையுண்டு.

**வாழ்க்கை ஒரு போர்க்களம் அதில் சிக்கனமாக இருத்தல் என்பது பாதி வெற்றிக்குச் சமம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேசிய மறுமலர்ச்சிக்காக அணி திரள்வோம்

## சுதந்திர தின வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி அநுர

(கொழும்பு)

**வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு என அனைத்து மக்களாலும் கட்டியெழுப்பப்பட்ட மக்கள் அரசாங்கத்துடன் புதிய பாதையில் நுழைந்துள்ளோம்.**

கடந்த நூற்றாண்டில் நாம் இழந்த மற்றும் தவறவிட்ட வளமான நாட்டையும் - ஒரு அழகான வாழ்க்கையையும் மீண்டும் கட்டியெழுப்புவதற்கான சவாலுடன் நாம் அனைவரும் இப்போது ஒன்றாகப் போராடுகிறோம் என ஜனாதிபதி அநுரகுமார தெரிவித்தார்.

77 ஆவது தேசிய சுதந்திர தின வாழ்த்துச் செய்தியில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நமது எதிர்காலச் சந்ததியினருக்காக நாட்டைப் புதிய நிலைக்கு உயர்த்த வேண்டும். இரத்தம், கண்ணீரால் போராடிய வரலாற்றின் அனைத்துத் தலைவர்களினதும் தியாகத்தின் எதிர்பார்ப்பு அதுவேயாகும். அதற்கிணங்க, நாம் தனித்தனியாகவும், கூட்டாகவும், ஒருங்கிணைந்த சமூகக் கட்டமைப்பாக, சுற்றாடல் மற்றும் ஒழுக்கநெறியூடாக அபிவிருத்தியடைந்த நவீன இலங்கை தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். புதிய அரசாங்கம் என்ற வகையில், கடந்த நான்கு மாதங்களில், வலுவான பொருளாதார அடிப்படையில் நாட்டை ஸ்திரப்படுத்துதல், புதிய அரசியல் கலாசாரத்தை நடைமுறைப்படுத்துதல், அரசியல் மற்றும் அரசியல்வாதிகள் தொடர்பிலான புதிய முன்னுதாரணத்துக்காக அர்ப்பணித்தல், இனவாதம், மதவாதம் இன்றி மற்றவர்களை சமத்துவம், கௌரவம், கரிசனையுடன் பார்ப்பது, நடத்துவது மற்றும் சட்டத்தை அமுல்படுத்துதல், ஆகியவற்றில் முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது.

கிராமப்புற வறுமையை ஒழித்தல் உள்ளிட்ட முக்கிய நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான எமது கொள்கைகள் மற்றும் செயற்பாடுகளை உறுதிப்படுத்தி, பாதிக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்படக்கூடிய சமூகக் குழுக்களை கைவிடாத அணுகுமுறையை உறுதிப்படுத்தும் நலன்புரி பொறிமுறையை உருவாக்குதல், நாம் தவறவிட்ட புதிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களை அடைந்துகொள்ள பொருளாதாரத்தை டிஜிற்றல் மயமாக்க தேவையான முதல் நடவடிக்கைகளை எடுத்தல், ஊழல் ஆட்சியாளர்கள் நிறைந்த நாடு என்று முன்பு காணப்பட்ட பிம்பத்தை தவிர்த்து, உலகின் அனைத்து நாடுகளுடனும், மிகவும் நம்பகத்தன்மையுடன் கொடுக்கல் வாங்கல் செய்யக் கூடிய நாடென சர்வதேச சமூகத்தின் முன் இலங்கையை மீள அடையாளப்படுத்துவதில் நாம் கவனம் செலுத்துகிறோம்.

பல நூற்றாண்டுகளாக நாம் கண்ட கனவை நனவாக்கிக் கொள்ள வரலாற்றில் மிகவும் ஆக்கபூர்வமான பணிகளை அசைக்க முடியாத நம்பிக்கையுடன் முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளது.

அதற்காக அனைத்து இலங்கை மக்களையும் உறுதி மற்றும் நம்பிக்கையுடன் அணி திரளுமாறும் அழைப்பு விடுத்துள்ளார். (நி-8)

# அரசாங்க வைத்தியசாலைகளில் வெளிநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் உள்ள அரச வைத்தியசாலைகளிலுள்ள வெளிநோயாளர் பிரிவுகளுக்கு ஆண்டுதோறும் சுமார் 58 மில்லியன் மக்கள் வருகை தருவதாக சமூக மருத்துவ நிபுணர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. சுமார் 3 மில்லியன் மக்கள் அரச வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுச் செல்வதாகவும் சுமார் 7 மில்லியன் மக்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் சங்கத்தின் தலைவர் சிறப்பு மருத்துவர் கபில ஜயரத்ன குறிப்பிட்டார்.

இலங்கையில் தற்போது பெண்களின் ஆயுட்காலம் சுமார் 80 ஆண்டுகளாகவும், ஆண்களின் ஆயுட்காலம் 73 ஆண்டுகளாகவும் உள்ளதாகவும், முதியவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார். (நி-8)

# அரசியல் பழிவாங்கல்களை நீதிமன்றம் ஊடாகத் தோற்கடிப்போம்

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் பழிவாங்கல் செயற்பாடுகளை நீதிமன்றத்தின் ஊடாகத் தோற்கடிக்கப்போவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே நாமல் ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, சந்தையில் அரிசி மற்றும் தேங்காய்க்குத் தட்டுப்பாடு அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் நாளுக்கு நாள் உயர்வடைந்து வருகின்றது. இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை. மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்காக அரசியல் கைதுகளைத் தற்போது முன்னெடுக்கின்றனர்.

எனக்கு எதிராகவும் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. நல்லாட்சி அரசாங்கத்திலும் எமக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இருப்பினும் எந்த குற்றச்சாட்டுக்களும் சட்டத்தின் முன் நிரூபிக்கப்படவில்லை.

நீதிமன்றத்தின் மீது எமக்கு நம்பிக்கை உள்ளது. குறுகிய அரசியல் நோக்கத்துக்காக விசாரணைக் கட்டமைப்பை பலவீனப்படுத்துவதையும், அச்சுறுத்துவதையும் அரசாங்கம் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

கடந்த காலத் தவறுகளை திருத்திக் கொண்டுள்ளோம். ஆகவே பல்வேறு காரணிகளால் எம்மை விட்டுப் பிரிந்து சென்றவர்கள் மீண்டும் எம்முடன் இணையலாம்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் அதற்கான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் எமது பலத்தை மீண்டும் உறுதிப்படுத்துவோம் என நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார். (நி-8)

லங்கா மஹால் (PVT) LTD
DHL
உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(559)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
0091956156719
Western Union MoneyGram. Ria Money Transfer
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

வேலைவாய்ப்பு
No.198 கஸ்தூரியார் வீதியிலுள்ள SB TRAVELS AND TOURS PVT LTD, Air ticketing அலுவலகத்திற்கு அனுபவமுள்ளவர்கள் (Sabre system தெரிந்தவர்கள்) விரும்பத்தக்கது. அனுபவமற்றவர்களுக்கு Training கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு:-
021 222 8555, 077 108 3482
(சி-2185)

தைப்பூசம்
அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோவில்
உலகப்பெரு மஞ்சத்திருவிழா

காலம்:- 11.02.2025 செவ்வாய்க்கிழமை
பால் குடப்பவனி
ஆரம்பம் - காலை 6 மணி
ஆரம்பிக்கும் இடம் - இணுவில் மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயம்.
தைப்பூசத்தினத்தன்று யாழ் குடா நாட்டின் பல பகுதிகளில் இருந்து பெரும் தொகையான முருகனின் மீளா அடியவர்கள் ஒன்று சேர்ந்து பால் குடத்தினை தமது சிரசில் ஏந்தி இணுவில் கந்தன் ஆலயத்திற்கு வந்து கேட்டவருக்கு கேட்ட வரம் அருளும் ஆறுமுகப்பெருமான் சமேத வள்ளி தெய்வானைக்கு பாலினால் அபிஷேகம் செய்து தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவது வருடா வருடம் இடம்பெற்று வருகின்றது.
தொலைவிலிருந்து ஆலயத்திற்கு வந்து பால் குடம் எடுக்கும் அடியவர்களின் வசதி கருதி பால், குடம் என்பன ஆலயத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.
ஒரு பால் குடப் பற்றுச் சீட்டு -400/=
பால் குடம் எடுக்க விரும்புபவர்கள் 10.02.2025 திங்கட்கிழமைக்கு முன்பு ஆலய கரும பீடத்தில் காலை 9-11 மணி, மாலை 4.30- 6.00 மணி வரை முற் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.
(சி-2186)
தைப்பூச பெருமஞ்ச கலை பண்பாட்டு மன்றம்
இணுவில் கந்தசுவாமி கோவில், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொகுசு பேருந்து விபத்து!

- ஐவர் உயிரிழப்பு
- 17 பேர் காயம்
- குஜராத்தில் சோகம்



(டில்லி)

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் சொகுசு பேருந்து ஒன்று விபத்துக்குள்ளானதில் ஐவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 17 பேர் காயமடைந்துள்ளனர்.

குஜராத் மாநிலத்தில் ஆன்மிகத் தலங்களுக்கு சுமார் 48 யாத்திரிகர்களுடன் பயணித்த பேருந்தொன்று நேற்று அதிகாலை விபத்துக்குள்ளானதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

டாங் மாவட்டத்தின் மலைப்பகுதியில் குறித்த பேருந்து வேகக்கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தாக்கில் வீழ்ந்து விபத்துக்குள்ளானமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவ்விபத்தில் இரண்டு பெண்கள் உள்ளிட்ட ஐவர் உயிரிழந்துள்ளதுடன் 17 பேர் படுகாயமடைந்துள்ள நிலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. (நி-8)

# விரைவில் திறக்கப்படவுள்ள பாம்பன் பாலம்



(சென்னை)

இராமேஸ்வரத்தில் கட்டப்பட்டுள்ள புதிய பாம்பன் பாலத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்த நிலையில் அதன் திறப்பு விழா குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

இராமேஸ்வரத்தின் முக்கிய அடையாளமாக விளங்கும் பாம்பன் பாலம் பழுதடைந்த நிலையில் அதன் அருகிலேயே புதிய பாம்பன் பாலம் கட்டப்பட்டுள்ளது. 545 கோடி ரூபாவில் செங்குத்து வடிவில் திறந்து மூடக்கூடிய அமைப்புடன், பழைய பாம்பன் பாலத்தின் சிறப்புகளோடு புதிய பாலமும் கட்டப்பட்டுள்ளது.

புதிய பாம்பன் பாலம் எப்போது திறக்கப்படும் என மக்கள் ஆர்வமுடன் காத்திருக்கும் நிலையில், அடுத்த மாதத்தில் தைப்பூச நாளிலோ அல்லது அதற்கு முந்தைய தினமோ பாலம் திறக்கப்படலாம் என்றும், புதிய பாலத்தைப் பிரதமர் மோடி நேரில் சென்று திறந்து வைக்க உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி-8)

# பெஞ்சமின் நெதன்யாகு அமெரிக்கா விஜயம்



(ஜெருசலேம்)

இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அதிகாரபூர்வ வெளிநாட்டு பயணமாக அமெரிக்கா சென்றடைந்துள்ளார்.

பெஞ்சமின் நெதன்யாகு நேற்று முன்தினம் காலை வோஷிங்டன் வந்தடைந்ததாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தப் பயணத்தின் போது, இஸ்ரேலியப் பிரதமர் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் பல உயர்மட்டத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பின்னர் ஒரு வெளிநாட்டுத் தலைவருடனான அவரது முதல் சந்திப்பு இது என்றும் கூறப்படுகிறது.

ஹமாஸ் உடனான இரண்டாம் கட்ட போர் நிறுத்தம் தொடர்பாக இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் அமெரிக்க ஜனாதிபதி இடையே பேச்சுவார்த்தை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வோஷிங்டனில் தனது உயர்மட்டக் கலந்துரையாடலுக்கு பின்னர் இஸ்ரேலிய பிரதமர் நாளை மறுதினம் வியாழக்கிழமை இஸ்ரேலுக்கு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (நி-8)

# பனாமா கால்வாயை அமெரிக்கா கைப்பற்றும்

## மீண்டும் ட்ரம்ப் எச்சரிக்கை



(வோஷிங்டன்)

பனாமா கால்வாயை அமெரிக்கா கைப்பற்றும் என மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ள அமெரிக்க ஜனாதிபதி மிகப்பெரியதாக ஏதாவது நிகழும் எனவும் தெரிவித்துள்ளார்.

பனாமா கால்வாயில் சீனாவின் பிரசன்னத்தினால் அமெரிக்காவிற்கும் பனாமாவிற்கும் இடையில் பதற்றநிலை அதிகரித்து வருகின்ற சூழ்நிலையிலேயே டொனால்ட் ட்ரம்ப் இதனைத் தெரிவித்துள்ளார்.

சீனாவிடம் கையளிக்கப்படாத பனாமா கால்வாயை சீனா நிர்வகிக்கின்றது என தெரிவித்துள்ள டொனால்ட் ட்ரம்ப் பனாமா கால்வாய் முட்டாள் தனமாகக் கையளிக்கப்பட்டது எனவும் தெரிவித்துள்ளார். (நி-8)

# வர்த்தகப் போரில் அமெரிக்கர்களும் பாதிக்கப்படலாம்-ட்ரம்ப்



(வோஷிங்டன்)

மெக்சிக்கோ, கனடா மற்றும் சீனா ஆகிய நாடுகளின் மீது விதித்துள்ள கடுமையான கட்டணங்கள் அமெரிக்கர்களுக்கு "குறுகிய கால" வலியை ஏற்படுத்தக்கூடும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

ஏனெனில் உலக சந்தைகளில் வரிகள் வளர்ச்சியை குறைமதிப்பிற்கு உட்படுத்தலாம் மற்றும் பணவீக்கத்தை மீண்டும் தூண்டலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

புதிய வரி விதிப்புகள் குறித்து கனடா மற்றும் மெக்சிக்கோ தலைவர்களுடன் பேசுவேன் என்றும் ட்ரம்ப் தெரிவித்தார்.

புளோரிடாவில் உள்ள தனது மார்-ஏ-லாகோ தோட்டத்தில் இருந்து வோஷிங்டனுக்குத் திரும்பிய ட்ரம்ப் செய்தியாளர்களிடம் உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

கனடா மற்றும் மெக்சிக்கோ மீது 25% வரியும் சீனா மீது 10% வரியும் விதிக்கும் குடியரசுக் கட்சியின் ஜனாதிபதியின் திட்டம், உலகளாவிய வளர்ச்சியைக் குறைப்பதுடன் அமெரிக்கர்களுக்கு விலையை உயர்த்தும் என்றும் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

குடியேற்றம் மற்றும் போதைப் பொருள் கடத்தலைத் தடுக்கவும் உள்நாட்டுத் தொழில்களை ஊக்குவிக்கவும் அவை தேவை என்று ட்ரம்ப் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கனடாவின் பொருட்கள் எமக்குத் தேவையில்லை

## கனடாவிற்கு ட்ரம்ப் பதிலடி



**(வோஷிங்டன்)**

**'கனடாவில் உற்பத்தி செய்யப்படும் எந்தப் பொருட்களும் எங்களுக்குத் தேவையில்லை, எங்களிடம் ஆற்றல் உள்ளது' என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.**

அமெரிக்காவின் 47 ஆவது ஜனாதிபதியாக கடந்த ஜனவரி மாதம் 20 ஆம் திகதி பதவியேற்ற குடியரசுக் கட்சியின் தலைவர் டொனால்ட் ட்ரம்ப் பல்வேறு அதிரடி அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறார்.

குறிப்பாக அண்மையில் கனடா, மெக்சிக்கோ ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25 சதவீதமும் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 10 சதவீதமும் வரி விதித்து ட்ரம்ப் உத்தர விட்டுள்ளார்.

இந்நிலையில், அமெரிக்கா விதித்த இறக்குமதி வரிக்கு பதிலடி கொடுக்கும் வகையில் கனடாவும் அமெரிக்க உற்பத்திகளுக்கு அதிகளவான வரியை விதித்துள்ளது. அதன்படி, அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25 சதவீதம் வரி விதிக்கப்படும் என்று கனடா அறிவித்துள்ளது. இந்த இறக்குமதி பெப்ரவரி 2 ஆம் திகதியிலிருந்து அமுல்படுத்தப்படும் என்றும் கனடா தெரிவித்திருந்தது.

இந்நிலையில் கனடாவின் அறிவிப்பால் ஆத்திரமடைந்துள்ள ட்ரம்ப் கனடாவில் உற்பத்தி செய்யப்படும் எந்தப் பொருட்களும் எங்களுக்குத் தேவையில்லை. எங்களிடம் ஆற்றல் உள்ளது, எங்களால் சொந்தமாக உருவாக்க முடியும் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் "நாட்டு மக்களுக்கு தேவைப்படும் அளவை விட அதிகமான அளவு எங்களிடம் பொருட்கள் உள்ளன. கனடாவை அமெரிக்காவின் 51 ஆவது மாகாணமாக உருவாக்குவோம். அதன் மூலம் கனடா மக்களுக்கு மிக குறைந்த வரி மற்றும் இராணுவ பாதுகாப்புகள் ஆகியவற்றை உருவாக்குவோம்" என்றும் ட்ரம்ப் உறுதியளித்துள்ளார்.(ரி-8)

# அவுஸ்திரேலியாவில் வெள்ளம்



(கன்பெரா)

குயின்ஸ்லாந்தில் தொடர் மழை காரணமாக அவுஸ்திரேலியப் பிரதான நெடுஞ்சாலையின் சில பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின.

தொடர்ந்தும் மழை பெய்து வருவதனால் நீர் மட்டம் உயரும் என்று அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

பிராந்தியத்தின் சில பகுதிகளில் ஏற்கனவே கடந்த சனிக்கிழமை 1.3m (4.2 அடி) மழை பெய்து வருகிறது. இதனால் அணைகள் மற்றும் ஆறுகள் நிரம்பி வழிகின்றன.

குயின்ஸ்லாந்து மாநில அதிகாரிகளின் தகவலின்படி, வெள்ளிக்கிழமை முதல் வடகிழக்கு குயின்ஸ்லாந்தின் சில பகுதிகளில் 1,000 மிமீ (39 அங்குலம்) மழை பெய்துள்ளது.

60 ஆண்டுகளுக்கும் மேலாக இப்பகுதியில் ஏற்பட்ட மிக மோசமான வெள்ளம் இதுவாக இருக்கலாம் என்று வானிலை ஆய்வாளர்கள் கூறியதாக சர்வதேச ஊடகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, அவுஸ்திரேலியாவின் வானிலை ஆய்வுப் பணியகம், மூன்று நாட்களில் ஆறு மாத மழையைப் பதிவு செய்ததாகக் கூறியுள்ளது. (ரி-8)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் இடம்பெற்ற ஜூடோ பயிற்சி செயலமர்வு

## விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் பங்கேற்பு



(கண்டாவளை)

வடக்கு மாகாணத்துக்கான ஜூடோ போட்டிகளில் கலந்து கொள்ளும் போட்டியாளர்களுக்கான ஒரு நாள் பயிற்சி செயலமர்வும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் கிளிநொச்சிப் பொது விளையாட்டு மைதானத்தின் உள்ளக அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்றது

இதில் விளையாட்டுத் துறை பிரதி அமைச்சர் சுகத் திலகரட்ன மற்றும் வடமாகாண விளையாட்டு அமைச்சின் உத்தியோகத்தர், மாவட்ட விளையாட்டுத் துறை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (6-8-315)

# ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற வழங்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப் படாததுமான கன்ரர் வாகனங்கள், கப் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டிகள், படகு, புவியியல் இடங்காட்டிகள், மீன்பிடி வலைகள், படகின் வெளி இணைப்பு மோட்டார் இயந்திரங்கள், நங்கூரம், குளிர்ப் பெட்டி மற்றும் இதர பொருட்கள் என்பன எதிர்வரும் 2025.02.08 ஆம் திகதி கர்லை 10 மணிக்குப் பருத் தித்துறை நீதவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (6-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 800 | 600 | 450 | 800-950 | 800 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 160 | 140 | 200 |
| பச்சைமிளகாய் | 1200 | 1100 | 1000 | 850-900 | 900 |
| தக்காளி | 350 | 250 | 250 | 220 | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 250 | 220 | 200-220 | 200 |
| கோவா | 350 | 300 | 200 | 300 | 400 |
| கரட் | 450 | 700 | 700 | 630 | 800 |
| பூசணி | 120 | 120 | 150 | 80-110 | 200 |
| புடோல் | 250 | 200 | 200 | 200 | 300 |
| வாழைக்காய் | 200 | 150 | 150 | 120-150 | 250 |
| சின்ன வெங்காயம் | 450 | 350 | 300 | 300-400 | 500 |
| பெரிய வெங்காயம் | 220 | 220 | 250 | 150 | 200 |
| பாகற்காய் | 600 | 700 | 500 | 600-700 | 600 |
| வெண்டக்காய் | 350 | 400 | 250 | 300 | 600 |
| கருணைக் கிழங்கு | 160 | 140 | 180 | 150 | 250 |
| பயற்றங்காய் | 800 | 700 | 500 | 800-850 | 800 |
| லீக்ஸ் | 350 | 400 | 350 | 350 | 450 |
| பீற்றூட் | 550 | 400 | 400 | 400 | 450 |
| கறிமிளகாய் | 1200 | 1100 | 600 | 800 | 1200 |
| முருங்கைக்காய் | -- | 3000 | 1400 | 2000 | 2500 |
| போஞ்சி | 400 | 450 | 400 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 750 | 500 | 300 | 600 | 600 |
| கீரை - 1 பிடி | 120 | 120 | 120 | 50-70 | 150 |
| தேசிக்காய் | 250 | 250 | 250 | 100-150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 220 | 250 | 180 | 150-210 | 200-250 |
| இராசவள்ளி | 500 | 500 | 500 | 500 | 800 |
| வெங்காயப்பூ | 250 | 250 | 400 | 200 | 300 |
| முள்ளங்கி | 100 | 120 | 250 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 70 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 50 | 80 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 100 | 200 |

# இன்று ஒரு தகவல் 314



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## உயிர் கம்யூட்டர்!

நான் கணக்கிலே மிகவும் வீக் சேர் என்று சொல்வதற்கு எங்களில் பலர் வெட்கப்படுவதில்லை. எங்களுடைய மூளை கணக்குப் போட எப்போதும் தயாராகத்தான் இருக்கிறது. ஆனால் அதை நாங்கள் சரியாக உபயோகப் படுத்துவதில்லை அதுதான் விடயம்.

கம்யூட்டர் வந்த பிறகு இன்னமும் சௌகரியமாகப் போய்விட்டது. கணக்குப் போடும் வேலையை எல்லாம் அதனிடம் ஒப்படைத்து விட்டோம்.

கம்யூட்டரை விட வேகமாக மனிதர்களால் கணக்குப் போட முடியுமா? முடியும். ஆனால் முடியும் என்று நிரூபித்துக் காட்டியவர்கள் இந்த உலகத்திலேயே பத்து இருபது பேர் தான். ஒரு பென்சிலோ காகிதமோ இல்லாமல் 17 இலக்க எண்களைக் கூட கூட்டி கழித்து பெருக்கி வகுத்தார்கள். நீங்கள் பிறந்ததிலிருந்து இந்த விநாடி வரைக்கும் எவ்வளவு காலம் ஆகியிருக்கும் என்று கேட்டால் அதை நொடிகளிலே சொல்கிறார்கள்.

ஒரு புத்தகத்தைக் கொடுத்துப் படிக்கச் சொல்லி அதில் மொத்தம் எத்தனை எழுத்து என்று கேட்டால் சரியாகச் சொல்கிறார்கள். இப்படிப்பட்ட திறமை சாலிகள் இந்த உலகத்திலே இருக்கத்தான் செய்கிறார்கள்.

அது சரி அவர்களால் மட்டும் அது எப்படி முடிகிறது. இதற்குச் சரியான விளக்கத்தை இதுவரை யாரும் சரியாகச் சொல்லவில்லை.

இந்தக் கணக்குப் புலிகள்-கணித மேதைகள் எப்படி அவ்வளவு பெரிய கணக்கெல்லாம் போடுகிறார்கள் என்று கேட்டால் அதற்கு யாராலும் சரியான விளக்கம் கொடுக்க முடியவில்லை. ஆனால் அவர்கள் கொஞ்சம் கூட அலட்டிக்கொள்ளாமல் கணக்குப் போட்டு சொல்லிவிடுகிறார்கள். இவ்வளவுக்கும் கணக்கை முறையாகக் கற்றுக்கொண்டவர்களா என்று கேட்டால் அதுவும் இல்லை.

சோவியத் ஆய்வாளர் ஒருவர் முதல் தடவையாக இது சம்பந்தமாக ஆச்சரியமான ஒரு முடிவைச் சொல்லியிருக்கிறார். அது என்ன தெரியுமா?

கம்யூட்டர்களையே தோற்கடிக்கக் கூடிய வேகத்திலே கணக்குப்போடும் திறமையுள்ள மூளை இயற்கையிலே சில பேருக்கு மட்டும் தான் இருக்கிறது. என்பது சரியில்லையாம். இந்த உலகத்தில் பிறந்த எல்லோருடைய மூளைக்குள்ளும் ஒரு கம்யூட்டர் மூளை இருக்கிறது என்கிறார் அவர்.

எங்களிடம் இருக்கும் சாதாரண மூளைக்கே அபாரமான திறமை இருக்கிறது சேர். இப்ப உதாரணத்திற்கு. ஒரு மாமரத்தில் உச்சிக் கிளையிலே ஒரு நல்ல மாங்காயைப் பார்க்கின்றோம். ஒரு கல்லை எடுத்துக் குறி பார்த்து வீசுகிறோம். ஒரு தடவை இல்லை என்றாலும் இன்னொரு தடவை சரியாக பார்த்து அடித்து விடுகிறோம். மாங்காய் கைக்கு வந்து விடுகிறது. இது சாதாரணமாக எல்லோரும் செய்யக்கூடிய ஒரு காரியம். இதிலே கவனிக்க வேண்டியது என்னவென்றால்...

கண்ணிமைக்கும் நேரத்தில் மனிதனுடைய மூளை கல்லின் எடை, மாங்காய் இருக்கும் உயரம், தூரம், எறிய வேண்டிய விசையின் அளவு எல்லாவற்றையும் கணக்குப் போட்டு சொல்லிவிடுகிறதே.

அதற்குப் பிறகு தானே கல்லை வீசுகிறோம். எங்களை அறியாமலே எங்களுக்குள்ளே நடக்கின்ற ஒரு அதிசயம் இது.

மனிதன் படைத்த கம்யூட்டராலே இவ்வளவு சிக்கல் நிறைந்த விடயத்தை இவ்வளவு சீக்கிரத்தில் கணக்குப் போட முடியாது.அதனால் மனித மூளைக்குள் ஒரு கம்யூட்டர் மூளை. அதாவது கணக்குப் போடுகின்ற மூளை இயங்குகிறது என்பதை இதிலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது.

இதை உயிர்க் கம்யூட்டர் என்று சொல்லலாம். இயற்கை என்ன செய்திருக்கிறது என்றால் இந்த உயிர் கம்யூட்டர் விசையை அணைத்து விட்டு உணர்வு மூளையின் செயற்பாட்டை திறந்து விட்டிருக்கிறது. அதனால் உணர்வு மூளையை உபயோகிக்கின்ற மனிதன் தன்னுடைய இயற்கைத் திறமையை மறந்து தானே வளர்த்துக்கொண்ட திறமையின் மூலமாக சிந்திக்க ஆரம்பித்தான்.

இயற்கையின் உயிர் கம்யூட்டர் விசை அணைக்கப்படாமல் சில பேருக்கு இருந்துவிடுகிறது. அவர்கள் தான் கணித மேதைகள். அவர்களுக்கெல்லாம் உயிர் கம்யூட்டருக்கும் உணர் மூளைக்கும் தொடர்பு ஏற்பட்டிருக்கிறது.

இந்தத் தொடர்பை எல்லோருக்கும் ஏற்படுத்துவது ஒரு வழியைக் கண்டு பிடித்தால் அதன்பின் நாங்கள் எல்லோரும் கணித மேதைகள் தான். கணக்குப் புலிகள் தான். அதுவரைக்கும் நாங்கள் இப்படியே இருப்போம்.

ஒருவர் மாங்காய் அடித்த கதை உங்களுக்குத் தெரியுமா? ஒரு மரத்து உச்சியிலே ஒருவன் ஒரு மாங்காயைப் பார்த்தான். உடனே அவனுடைய மூளை கல்லின் எடை, மாங்காய் இருக்கின்ற உயரம், எறிய வேண்டிய விசையின் அளவு எல்லாவற்றையும் ஒரு நொடியிலே கணக்குப் போட்டு சொல்லிவிடுகிறது.

அடித்தான் மாங்காய் விழுந்து விட்டது. ஆனாலும் அவன் தனது மூளையை நொந்து கொண்டான். மோசமான மூளை என்றான்.ஏன் என்று கேட்டேன். என் மூளை எல்லாவற்றையும் கணக்குப் போட்டு சொல்லி விட்டது. இருந்தாலும் ஒரு விடயத்தை என்னிடம் சொல்லாமல் விட்டுவிட்டது என்றான் எதைச் சொல்லவில்லை என்று கேட்டேன்.

அந்த தோட்டத்துச் சொந்தக்காரன் என் பின்னால் 10 அடி தூரத்திலே நிற்கிறான் என்பதை எனக்குக் கணக்குப் போட்டு சொல்லாமல் விட்டு விட்டது என்றான் முதுகைத் தடவிக்கொண்டே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிபதி இளஞ்செழியனின் சேவைநலன் பாராட்டு விழா



(குருமன்காடு)

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் மா.இளஞ்செழியனின் சேவை நலன் பாராட்டு விழா கடந்த சனிக்கிழமை வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி அன்ரன் புனித நாயகம் தலைமையில், வவுனியா ஈரப் பெரியகுளம் பகுதியில் உள்ள விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

ஏ9 பிரதான வீதியில் இருந்து மங்கள வாத்தியங்கள் முழங்க மாலை அணிவித்து நீதிபதி மா.இளஞ்செழியன் வரவேற்கப்பட்டதுடன், அவரது 28 வருட நீதித்துறை சேவையைப் பாராட்டி வடக்கு - கிழக்கு பகுதிகளில் இருந்து வருகை தந்த மேல் நீதிமன்ற, மாவட்ட நீதிமன்ற, நீதவான் நீதிமன்ற நீதிபதிகள், வடக்கு - கிழக்கைச் சேர்ந்த சட்டத் தரணிகள் எனப் பலரும் அவரது சேவையை பாராட்டி கௌரவிப்புக்களையும் வழங்கியிருந்தனர். (6-8-250)

# உயிரிழந்த பன்றிகளின் மாதிரிகள் பரிசோதனைக்கு

(கண்டாவளை)

கிளிநொச்சியில் தனியார் பன்றிப் பண்ணை ஒன்றில் நோய்த்தொற்றுக் காரணமாக உயிரிழந்த பன்றிகளின் உடலை மருத்துவ பரிசோதனைக்குட்படுத்தி மன்றுக்கு அறிக்கை இடுமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது

செல்வாநகர் பகுதியில் உள்ள தனியாருக்கு சொந்தமான பன்றி வளர்ப்பு பண்ணையில் கடந்த சனிக்கிழமை நோய்த்தொற்றுக் காரணமாகத் தொடர்ச்சியாக பல பன்றிகள் உயிரிழந்துள்ளன.

இந்நிலையில் குறித்த பண்ணையிலிருந்து ஒரு தொகுதிப் பன்றிகளை வேறு ஒரு பண்ணைக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட சமயம் கால்நடை வைத்திய அதிகாரியினால் குறித்த பண்ணையாளருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது

இதனையடுத்து குறித்த வழக்கானது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதில் நீதவான் எஸ். சிவபால சுப்பிரமணியம் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது உயிரிழந்த பன்றிகளின் மாதிரிகளைப் பெற்று மருத்துவ அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு மன்று கட்டளையிட்டுள்ளது.

குறித்த பண்ணையில் உயிரிழந்த பன்றிகளின் மாதிரிகள் உயிருடனுள்ள ஏனைய பன்றிகளின் இரத்த மாதிரிகள் பெறப்பட்டு பேராதனையில் உள்ள மிருக வைத்திய ஆராய்ச்சிப் பிரிவுக்கு அனுப்பி வைக்கவுள்ளதாவும் கால்நடை வைத்திய அதிகாரி இ. கனகரத்னம் தெரிவித்துள்ளார். (6-8-315)

# சட்டவிரோத மீன்பிடி 10 இந்திய மீனவர்கள் கைது

(மன்னார்)

தலைமன்னாருக்குத் தெற்காகவுள்ள கடற் பகுதியில் நேற்று அதிகாலை சட்ட விரோதமாகக் கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 10 இந்திய மீனவர்களைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இதன்போது, இழுவைப் பட கொன்றும் கைப்பற்றப்பட்டதாகக் கடற்படை பேச்சாளர் தெரிவித்தார்.

கைதான மீனவர்களை மன்னார் நீதிமன்றில் ஆஜர் படுத்தினர். இதன்போது வழக்கினை விசாரித்த நீதவான் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியில் வைக்க உத்தரவிட்டார்.

இதேவேளை, கடந்த ஒரு வார காலப்பகுதியினுள் இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மொத்தமாக 57 இந்திய மீனவர்கள் கைதாகியுள்ளதாக கடற்படைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (6-8-285)

# பித்தளையிலான முடி திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குழிப் பகுதியில் அமைந்துள்ள தேவாலயம் ஒன்றில் பித்தளையினால் ஆன ஆசீர்வதிக்கும் முடி திருட்டுப் போயிருப்பதாகச் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேவாலயத்தில் ஆட்கள் இல்லாத நேரம் பார்த்துத் திருட்டு இடம்பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேற்படி திருட்டுத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (6-8-30)



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மன்னார் மரியன்னை ஆலய அபிஷேகம் மற்றும் திறப்பு விழா கடந்த சனிக்கிழமை மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் குறித்த ஆலயம் அபிஷேகம் செய்யப்பட்டு வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. (படம்: ஜோசப்நயன்)


# சிவபூமி திருக்குறள் வளாகம் திருமூலர் காட்டிய இலங்கைத் திருநாட்டில் தமிழ் மக்களுக்கு பரிசாக உதயமாகும் அருள்மிகு சிவபூமி

**"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது."**

பாடலைப் படைப்போம். திருமந்திரம் 1824

**வேட்டவி யுண்ணும் விரிசடை நந்திக்குக்**
**காட்டவும் யாமிலம் காலையும் மாலையும்**
**ஊட்டவி யாவன உள்ளங் குளிர்விக்கும்**
**பாட்டவி காட்டுதும் பால்அவி யாமே.**

காலையும் மாலையும் சிவப்பரம் பொருளுக்கு ஊட்டும் உணவாக நிவேதனமாக இறைவன் மனதைக் குளிர்விக்கும் தோத்திரமாக பாட்டு அவியை உணவாகப் படைப்போம்

சிவபூமி அறக்கட்டளையின் 63 சொத்தும் இலங்கைத் திருநாடெங்கும் பரவியது. இந்தியத் திருநாட்டின் 63 நாயன்மார்களது நினைவுடன் ஆறு திருமுருகன் சேவையை வாழ்த்துவோம்.

ஒரு மண்டலம் என்பது 48 நாட்கள் ஆகும். அவ்வாறு 48 பல ஆக்கங்களாக திருக்கோயில்கள், பாடசாலைகள், மடங்கள், ஆச்சிரமங்கள், முதியோர் இல்லங்கள், தனித்துவமான உருவாக்கங்கள், மருத்துவ நிலையங்கள், விவசாய பண்ணைகள், விலங்குகள் சரணாலயங்கள், சிலைகள் இன்னும் பல பணிகளாக அவ்வாறு ஒரு மண்டலமாக ஈழத்திருநாடாகிய இலங்கையில் திருமூலர் திருப்பாட்டில் அமைந்த சிவபூமியாகும்.

02.02.2025 அன்று கலாநிதி குமார வடிவேல் குருபரன் சிரேஸ்ட சட்டத்தரணி ஆற்றிய உரையில் எல்லோரது கவனத்தையும் வருங்கால சமுதாயம் உருவாக நம் முன்னோர் எவ்வாறு நடந்தனர் என்பதைச் சுட்டிக்காட்டினார். பல பாடசாலை அதிபர்கள் ஒன்று கூடி மகாத்மாகாந்தியை இலங்கைக்கு வரவழைத்த விடயமும், தனது தந்தையாரது வழி நடத்துதலையும் ஆறுமுகநாவலர் வழியில் இன்று பல அதிபர்களால், திரு.ஆறுதிருமுருகனின் சிறந்த முயற்சிகளையும் பிரதம நீதியரசர் உயர்திரு அரங்க.மகாதேவன் அவர்கள் உரையாற்றியதையும், சிவபூமி மக்கள் அனைவரையும் கணனியில் பார்த்து சைவநெறி, அறநெறியில் நாம் சிறப்பான வாழ்வை அமைப்போம்.

சிவபூமி அறக்கட்டளை எனும் ஆலமரமானது ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் இன்று வரை அயராது பாடுபடுகின்ற தலைவரும் நிறுவுனருமான கலாநிதி ஆறு திருமுருகன் ஐயாவின் ஆக்கமும் ஊக்கமும் பாராட்டி இந்தியாவில் இருந்து வந்த மாண்புமிகு நீதியரசர் உயர்திரு அரங்க.மகாதேவன் (இந்திய உச்ச நீதிமன்றம்-புதுடெல்லி) அவர்கள் பாராட்டி ஒரு லட்ச ரூபா அன்பளிப்புச் செய்ததனை ஒவ்வொரு இலங்கைத் திருநாட்டின் அனைத்து மக்களையும் சிந்தனையில் துர்க்காபுரந்தரி தெளிவு படுத்தியுள்ளார் அருள்மிகு அம்பிகை.

சிவபூமி அறக்கட்டளையின் வெள்ளி விழாவில் "சிவபூமி திருக்குறள் வளாகம்" மற்றும் அனைத்து ஆக்கங்ளையும் இலங்கைத் திருநாட்டின் அனைவரும் அவர்களது வெளிநாட்டில் இருந்து வரும் உறவினரையும் வாரம் ஒரு தடவை சென்று காட்டி என்றும் காப்பாற்ற வேண்டியது எதிர்கால சந்ததியின் கடமையாகும். 02.02.2025 ஞாயிறு சிவ சூரிய பகவான் வாரத்தில் நம் சிந்தனையில் பதிப்போம் திருமுறைகளையும் திருக்குறள், திருவாசகம், திருமந்திரமும் கருங்கல்லின் பதிவினை நம் மனதிலும் பதிப்போம் இறை அருள் பெறுவோம்.

ஈழத்துச் சிதம்பரம் தில்லைக் கூத்தனையும்
நல்லூர்க் கந்தனையும் பிரார்த்தித்து
ஆறுதிருமுகனையும் வாழ்த்தி
நாமும் நம் எதிர்கால சந்ததியும்
சைவநெறி அன்பு நெறி அறநெறியில் வாழ்வோமாக



**க.கு.க சிவபாலன்**
**போசகர், ஈழத்துச் சிதம்பரம்,**
**மாணிக்கவாசகர் மடாலயம்.**

(சி-2187)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின்

# பொன்னியின் செல்வன் 695

காவியத் தொடர் -பாகம் -III





வானத்தில் ஜொலிக்கும் சந்திரன் மீது அன்றில் பறவை காதல் கொள்ள லாம். ஆனால் சந்திரனுக்கு அன்றில் பறவை ஒன்று இருப்பதே தெரிந்திராது.

"ஆஹா! என் அருமைச் சிநேகிதரின் மகள் இவ் வளவு சிறந்த கவிதா ரசிகை என்பது இதுவரை எனக்குத் தெரியாமற் போயிற்று. இளைய பிராட்டி குந்த வையின் அந்தரங்கத் தோழி அல்லவா நீ என்றார் முதன் மந்திரி.

போதும் போதும்! தங் கள் புகழ்ச்சியைக் கேட்க நான் விரும்பவில்லை. ஒன்று என்னை என் வழியே போவ தற்கு விடுங்கள். இல்லா விடில் உங்கள் ஆட்களை அழைத்துக் கட்டளையி டுங்கள்.

பெண்ணே! கொஞ்சம் பொறு! பொன்னியின் செல் வரைப் பற்றி உனக்கு எவ்வ ளவோ விவரங்கள் தெரிந்தி ருக்கின்றன. ஆகையால் அவர் இப்போது இருக்கு மிடமும் உனக்கு அவசியம் தெரிந்திருக்க வேண்டும். அதை மட்டும் சொல்லிவிடு. உன்னை உடனே உன் பெரிய தந்தையிடம் அனுப்பி வைக் கிறேன். அவர் இலங் கையி லிருந்து திரும்பி வந்து கொண்டிருக்கிறார். இத் தனை நேரம் மதுரைக்கு வந் திருப்பார்.

ஐயா! தங்களைப் போன்ற வஞ்சம் நிறைந்த மனிதருடன் சிநேகமாயிருப்பவர் என் னுடைய பெரிய தந்தை அல்ல. எனக்கு உற்றார் உறவினர் யாருமில்லை. இளவரசரைப் பற்றி எல்லாரும் அறிந்தி ருப்பதையே நான் சொன் னேன். வேறு எதுவும் என்னி டமிருந்து தாங்கள் தெரிந் துகொள்ள முடியாது. வீண் தாமதம் செய்ய வேண்டாம்

தாமதம் செய்யக்கூடாது தான். பலமாக மழை வரும் போலிருக்கிறது.

மழை மட்டுந்தானா வரும்? தங்களைப் போன் றவர்கள் உள்ள இடத்தில் இடி, மின்னல், பிரளயம் எல்லாம் வரும்!

வானதியின் கூற்றை ஆமோ திப்பது போல் அச்சமயம் ஒரு நெடிய மின்னல் வானத் தின் ஒரு முனையிலிருந்து இன்னொரு முனை வரையில் பாய்ந்தோடி ஜொலித்து விட்டு மறைந்தது. மின்னல் மறைந்து இருள் சூழ்ந்ததும் அண்டகடாகங்கள் அதிரும் படியான பேரிடி ஒன்று இடித்தது.

பெண்ணே! இளவரசன் அருள்மொழிவர்மன் எங்கே இருக்கிறான் என்று சொல் லமாட்டாயா?

"சொல்லமாட்டேன்!"

"நான் ஊகித்தது ஊர்ஜித மாகிறது. இளவரசன் மறைந் திருக்கும் இடத்துக்கு நீ ஏதோ இரகசியச் செய்தி கொண்டு போவதற்காகப் புறப்பட்டாய் இது உண் மையா, இல்லையா?"

"ஐயா! வீண் வேலை, தங் கள் கேள்வி எதற்கும் இனி நான் மறுமொழி சொல்ல முடியாது."

"அப்படியானால், இரா ஜாங்கத்துக்கு துரோகமா கச் சதி செய்பவர்களுக்கு அளிக்கவேண்டிய கடுந் தண்டனையை உனக்கும் அளிக்க வேண்டியதுதான் வேறு வழி இல்லை."

"தண்டனையை ஏற்பதற் குக் காத்திருக்கிறேன் ஐயா! பலிபீடத்தில் என் தலையை வைக்கவேண்டும் என்றால் அப்படியே செய்கிறேன்."

"சேச்சே! நீ கொடும்பா ளூர் வேளிர்மகள்! உனக்கு அவ்வளவு அற்பமான தண் டனை கொடுக்கலாமா? அதோ பார் அந்த யானையை!"

வானதி, அவர் காட்டிய திசையைப் பார்த்தாள் கன் னங்கரிய குன்றினைப் போல் யானை ஒன்று நின்று கொண் டிருந்தது. கருங்கல்லினால் செய்த கரிய மை பூசப்பட்ட உருவத்தைப் போல் அது தோன்றியது. அதன் கரு மையை நன்கு எடுத்துக் காட் டிக்கொண்டு இரண்டு வெள் ளைத் தந்தங்கள் நீண்டு வளைந்து திகழ்ந்தன.

"பெண்ணே! கஜேந்திர மோட்சம் என்று கேள்விப் பட்டிருக்கிறாய் அல்லவா?

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்

## தானம் அளிப்பது சிறந்தது



மைசூரை ஒரு மன் னன் ஆண்டு வந் தான். அவன் நீதியும், நேர்மையும் கொண் டவன். அன்பும் அரு ளும் நிறைந்தவன். அவன் ஒரு சமயம் காட்டுக்கு வேட்டை யாடச் சென்றான்.

வழியில் வயதான விறகுவெட்டி ஒரு வன் தலையில் விறகு களைச் சுமந்தபடியே வந்தான். மன்னன் விறகு வெட்டியைப் பார்த்ததும் தள்ளாடும் வயதில் இவர் இப்படி கஷ்டப்படுகிறார் என்று வருந்தினான்.

பிறகு விறகு வெட் டியை பார்த்து, ஐயா உங்களுக்குப் பிள்ளை கள் இல்லையா? இந்த வயதிலும் இப்படிப் பாடுபடுகிறீர்களே என்று கேட்டான். அதற்கு விறகு வெட்டி அரசனைப் பார்த்து அரசே, எனக்கு பிள்ளை கள் இருக்கிறார்கள்.

ஆனால் அவர்கள் இப்போது என்னுடன் இல்லை. அவர்கள் தங் களுடைய மனைவிமார் களின் பேச்சை கேட்டு தனிக் குடித்தனம் போய்விட்டார்கள். இப்பொழுது வீட்டில் நானும் என் மனைவி யும் மட்டும் தான் இருக்கிறோம்.

அதனால் இப்படி பாடு படும்படி ஆகி விட்டது என்றான். இதைக் கேட்டதும் அரசன் அந்த விறகு வெட்டியின் துன்பத் தைப் போக்குவதற்கு தன் நாட்டில் உள்ள சந்தன காட்டின் ஒரு பகுதியை அவனுக்கு தானமாக வழங்கி னான்.

இதனால்விறகு வெட்டி பெரும் மகிழ்ச்சி அடைந்தான். விறகு வெட்டிக்கு தன்னு டைய சந்தனக் காட்டை நன்கொடையாக தந் ததில் அரசனுக்கு மிக்க மகிழ்ச்சி. ஏனெ னில் கிழவனான அவன் சந்தன மரங்களை வெட்டி விற்பான்.

ஒவ்வொரு மரம் ஒரு லட்சம் விலை பெறும். அதைக் கொண்டு வீடு, நிலம் என்று வசதி எல்லாம் பெற்று சுகமாக இருப் பான் என்று எண்ணி னான். அரசன் நினைத் தபடியே விறகு வெட் டியும் நடந்து கொண் டான்.

ஆண்டுகள் பல கடந் தன. அரசன் வழக் கம் போல் வேட்டை க்கு செல்கையில் எதிரே பெரிய செல் வர் ஒருவர் வருவதை கண்டான்.

மக்கள் அனைவ ரும் அவருக்கு மரி யாதை அளித்தனர். அரசன் அந்தப் பெரி யவரை தன் அரண் மனைக்கு அழைத்து வருமாறு காவலர் களை அனுப்பினான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து விரல்கள் உருவத்தால் வேறுபட்டாலும் ஒன்று பட்டு இயங்குவது போன்று நாம் அனைவரும் ஒன்று பட்டாலே வெற்றிக்கனியை எட்டமுடியும். -

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஓர் இனத்துக்குச் சுதந்திரம் இன்னோர் இனத்துக்குத் துன்பம்

இன்று இலங்கையின் 77ஆவது சுதந்திர தினம். இப்போது நாட்டின் ஜனாதிபதியாக அநுர குமார திஸாநாயக்க பதவிவகிக்கின்றார்.

77ஆவது சுதந்திர தின நிகழ்வில் தேசியக் கொடியை அவர் ஏற்றி வைக்கும்போது தமிழிலும் தேசிய கீதம் இசைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்குதான் ஒரு விடயத்தை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழில் தேசிய கீதம் இசைப்பதை கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது தடை செய்தார்.

சிங்களத்தில் மட்டுமே தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என்பது அவரின் தீர்மானமாக இருந்தது.

ஒரு மொழியில் தேசிய கீதம் இசைத்தால் அதுபோதும் என்பது போல அவர் காட்டிக் கொண்டாலும் இலங்கை சிங்கள பௌத்தர்களின் நாடு.எனவே இங்கு தமிழில் தேசிய கீதம் இசைக்க வேண்டிய தேவையில்லை என்பதே அவரின் உண்மைப்பாடு.

இருந்தும் அது விடயத்தில் தமிழ் மக்கள் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை.அதாவது நாடு சுதந்திரமடைந்தபோதிலும் தமிழ் இனத்துக்குச் சுதந்திரம் கிடைக்கவில்லை.

இந்த நாட்டை இறுதியாக ஆட்சி செய்த பிரிட்டிஷார் தமிழ் மக்கள் பற்றி இம்மியும் சிந்திக்காமல் ஒட்டுமொத்த இலங்கையையும் சிங்களத் தலைவர்களின் கைகளில் ஒப்படைத்து விட்டுச் சென்றனர்.

அவர்கள் செய்த அந்த வஞ்சகத்தால் இன்றுவரை நம் தமிழினம் சொல்லொணாத் துன்ப துயரங்களை அனுபவித்து வருகிறது.

இந்தநிலையில் தேசிய கீதத்தை சிங்களத்தில் மட்டும் பாடினால் என்ன? பாடாமல் விட்டால் என்ன? என்ற மனநிலையே தமிழ் மக்களிடம் உள்ளது.

ஆக, இலங்கையின் சுதந்திரம் என்பது இலங்கைக்கான சுதந்திரம் அல்ல. அது சிங்களவர்களுக்கான சுதந்திரம்.

எனவே சிங்களவர்கள் சுதந்திரதினத்தை கொண்டாடும்போது அவர்கள் சிங்களத்தில் தேசிய கீதத்தை இசைப்பது பொருத்தம் என்பது தமிழ் மக்களின் நிலைப்பாடாக உள்ளது.

எனினும் இன்றைய 77ஆவது சுதந்திர தினத்தின் போது தேசிய கீதத்தை தமிழிலும் இசைப்பதற்கான ஏற்பாடுகள் நடந்தாகின்றன.

அதாவது இலங்கையின் சுதந்திரம் இந்த நாட்டின் அனைத்து மக்களுக்குமானதெனக் காட்டுவதுதான் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் எண்ணம்.

நல்லது. தமிழ் மக்களையும் சேர்த்து இந்த நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற ஜனாதிபதி அநுரவின் சிந்தனை வரவேற்கப்பட வேண்டும்.

ஆனால் தமிழில் தேசிய கீதம் இசைப்பதென்பது தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு அன்று.

மாறாக, தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வை முன்வைத்து அவர்கள் இந்த நாட்டில் அனைத்து உரிமைகளுடன் வாழுகின்ற சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டும்.

அப்போதுதான் தமிழில் தேசிய கீதம் இசைப்பது அர்த்தமுடையதாக இருக்கும்.

### "அமெரிக்காவே முதலில்" ட்ரம்பின் திட்டம்

## இலங்கையில் இழுத்து மூடப்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள்

அமெரிக்காவின் புதிய அதிபர் டொனால்ட் ட்ரம்பின் "அமெரிக்காவே முதலில்" என்ற கொள்கைப் பிரகடனத்தினால் இலங்கையில் உள்ள பல அரசசார்பற்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் செயற்றிட்டங்கள் முடக்கப்பட்டு, இழுத்து மூடப்படவேண்டிய நெருக்கடி நிலை தோன்றியுள்ளது.

அமெரிக்க அரசாங்கம் யூ. எஸ். எயிட் ஊடாக வெளிநாடுகளுக்கு வழங்கிவரும் நிதி உதவிகளை முடக்க ட்ரம் அரசாங்கம் முடிவு செய்திருப்பதனால் இலங்கையின் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் பல நெருக்கடி நிலையை எதிர்நோக்கியுள்ளன என்றும், இதனால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட உள்ளூர் பணியாளர்கள் வேலைகளை இழக்க வேண்டிய ஆபத்தில் உள்ளனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சர்வதேச மேம்பாட்டுத் திட்டங்களை விட உள்நாட்டு செலவினங்களுக்கு முன்னுரிமை அளித்தல் என்ற கொள்கையுடன், அமெரிக்க அரசாங்க செயற்திறன் துறையை வழிநடத்துவதற்கென அதிபர் ட்ரம்பால் நியமிக்கப்பட்ட பில்லியனர் எலன் மஸ்க்கின் ஆலோசனைக்கமையவே இந்த நிதி இடைநிறுத்தம் அறிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

பில்லியனர் எலன் மாஸ்க், யூ.எஸ். எயிட் நிறுவனத்தை ஒரு "குற்றவியல் அமைப்பு" என்று வர்ணித்ததன் பின்னர், யூ.எஸ். எயிட் நிறுவனத்தின் செயற்பாடுகளை முடக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும், அதனையடுத்து யூ.எஸ். எயிட் நிறுவனத்தில் பெருமளவானோர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். கிட்டத்தட்ட 60 சிரேஷ்ட நிலைப் பணியாளர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

"அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் இந்த முடிவு எங்களைக் கண்மூடித்தனமாகப் பாதித்துள்ளது. நாங்கள் எமது பணியாளர்களைப் பணிநீக்கம் செய்ய வேண்டி ஏற்பட்டால் நடைமுறையில் உள்ள பல திட்டங்கள் முடிந்துவிடும். அலுவலகங்களை இழுத்து மூடவேண்டிய நிலை தான் ஏற்படும்" என்று பாதிக்கப்பட்ட அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.(ந-7)

## உத்தியோகபூர்வமாக அறிவித்தால் வாசஸ்தலத்தை மகிந்த விடுவார்

### பெரமுனவின் செயலர் உறுதி

*(கொழும்பு)*

அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்தால் மட்டுமே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது உத்தியோகபூர்வ இல்லத்தைக் காலி செய்யத் தயாராக இருப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (03) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர், நல்லாட்சி அரசாங்கத்தால் மகிந்த ராஜபக்ஷவுக்கு உத்தியோகபூர்வ இல்லம் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டுள்ளதால், அதிலிருந்து வெளியேற வேண்டுமானால் அதுகுறித்து அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

அப்படி ஒரு அறிவிப்பு வெளியிடப்பட்டால், மகிந்த ராஜபக்ஷ ஒரு கணம் கூட அங்கே தங்க மாட்டார் என்றும், அது குறித்து இங்கும் அங்கும் கருத்துக்களை வெளியிடுவதில் எந்த அர்த்தமும் இல்லை என்றும் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

மேலும், உத்தியோகபூர்வ இல்லம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களுக்கு அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ந-7)

## ரூ. 7 கோடி பெறுமதியான சட்டவிரோத கார்கள் மீட்பு

*(கலவானை)*

இரத்தினபுரி - கலவானைப்பகுதியில் போலி ஆவணங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட 7 கோடி ரூபாய் பெறுமதியான கட்டமைக்கப்பட்ட ஐந்து கார்கள் மத்திய ஊழல் தடுப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கலவானைப் பகுதியைச் சேர்ந்த பொல்கொடுவே கட்டா என அறியப்படும் வாகன விற்பனையாளர் ஒருவரால் போலியான இயந்திர இலக்கம் மற்றும் அடிச்சட்ட இலக்கம் என்பவற்றைக் கொண்டு போலி ஆவணங்களைத் தயாரித்து வாகனங்கள் விற்பனை செய்யப்படுவதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

அதனடிப்படையில் மத்திய ஊழல் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, மூன்று வெவ்வேறு இடங்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த 5 கார்களும் மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சுற்றிவளைப்புகளின்போது குறித்த வாகனங்களின் உரிமையாளர், அச்சம் காரணமாக மயக்கமுற்றதாகவும் அதனையடுத்து அவர் சிகிச்சைகளுக்காக இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ந -7)

## சுதந்திர தினத்தில் 285 கைதிகள் விடுதலை

*(கொழும்பு)*

77 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இன்று 285 கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விசேட பொது மன்னிப்பின் கீழ் ஆறு பெண் கைதிகள் உட்பட 285 பேர் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

இதேவேளை இன்று சிறைக் கைதிகளை திறந்த வெளியில் சந்திப்பதற்கும், அவர்களின் உறவினர்களுக்கு விசேட சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ந-7)

## விளையாடிக்கொண்டிருந்த இளைஞன் மீது தாக்குதல்

### வவுனியாவில் சம்பவம்

*(வவுனியா)*

வவுனியா தவசிக்குளம் பகுதியில் உள்ள விளையாட்டு மைதானம் ஒன்றில் கிரிக்கெட் போட்டியொன்று இடம்பெற்றுக்கொண்டிருந்தவேளை, மைதானத்திற்குள் பிரவேசித்த சிலர் விளையாடிக் கொண்டிருந்த இளைஞனைத் தாக்கியதில் அவர் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, தவசிக்குளம் பகுதியில் இரண்டு அணிகளுக்கிடையில் கிரிக்கெட் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்தது. இதன் போது குறித்த மைதானத்திற்குள் வந்த சிலர் விளையாட்டில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் மீது தாக்குதல் நடத்தியதுடன், விளையாட்டு நிகழ்வுக்கு வழங்கப்படவிருந்த வெற்றிக் கிண்ணங்கள் மற்றும் கதிரைகளையும் அடித்து உடைத்துள்ளனர்.

காயமடைந்த இளைஞர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அங்கு பெறப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகள் இடம்பெற்று வருவதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர். (ந-7,250)

### போக்குவரத்துக்கு இடையூறாக

## உந்துருளிப் பந்தயம் பத்துப் பேர் கைது

தெஹிவளையிலிருந்து வெள்ளவத்தை வரை, கரையோர வீதியில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் உந்துருளிப் பந்தயத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 10 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது அவர்களால் பந்தயத்திற்காகப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் 10 உந்துருளிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதானவர்கள் மொரட்டுவை, ரத்மலானை, கல்கிசை, தெஹிவளை மற்றும் பொரலஸ்கமுவ ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 18 முதல் 25 வயதுகளுக்கு இடைப்பட்டவர்கள் என ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைதான பத்துப்பேரையும் கல்கிசை நீதவான் நீதிமன்றில் பிரசன்னப்படுத்தவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தலில் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான தெளிவூட்டல் பகுதி - II

12

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

இப் பிரதேச சபை 14 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை யாவும் தனி உறுப்பினர் வட்டாரங்கள் ஆகும். வட்டாரங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கை 14 ஆகும்.

வவுனியா வடக்கு பிரதேச சபையின் விஸ்தீரணம் கிட்டத்தட்ட 725.83 சதுர கிலோமீற்றர்கள் ஆகும். 2020 ஆம் ஆண்டுச் சனத் தொகை கிட்டத்தட்ட 16171 பேர். 2018 ஆம் ஆண்டு பிரதேச சபைத் தேர்தலுக்குப் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 12166 ஆகும்.

2018ஆம் ஆண்டுத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (ITAK), ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP), ஐக்கிய தேசியக் கட்சி (UNP), அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (TC), ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP), தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF), ஸ்ரீலங்கா கொமியூனிஸ்ட் க்ட்சி, மற்றும் மக்கள் விடுதலைக் கூட்டணி (JVP) ஆகியன போட்டியிட்டன.

**வவுனியா வடக்கு பிரதேச சபைத் தேர்தல் – 2018**
**கட்சிகள் பெற்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை**

| உள்ளூராட்சி சபை | வவுனியா வடக்கு பிரதேச சபை |
|---|---|
| வட்டாரங்களின் எண்ணிக்கை | தனி- 14 பல் – 0 |
| வட்டார உறுப்பினர்கள் எண்ணிக்கை | 14 |
| சபைக்குரிய மொத்த உறுப்பினர்கள் | 26 |

| அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை | சதவீதம் | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு உரிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | வட்டாரங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேலதிக பட்டியலில் இருந்து நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேன்மிகை உறுப்பினர்கள் எண்ணிக்கை (Over Hang)* |
|---|---|---|---|---|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | 2,794 | 27.98% | 6 | 8 | - | 2 |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 1,870 | 18.73% | 4 | 5 | - | 1 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1,370 | 13.72% | 3 | - | 3 | - |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 1,254 | 12.56% | 3 | 1 | 2 | - |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 1,124 | 11.26% | 3 | - | 3 | - |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 973 | 9.74% | 2 | - | 2 | - |
| மக்கள் விடுதலை முன்னணி | 303 | 3.03% | 1 | - | 1 | - |
| ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி | 246 | 2.46% | 1 | - | 1 | - |
| ஸ்ரீலங்கா கொமியூனிஸ்ட் கட்சி | 51 | 0.51% | - | - | - | - |
| மொத்தம் | 9,985 | 100% | 23 | 14 | 12 | 3 |

| | |
|---|---|
| செல்லுபடியான மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 9,985 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 166 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 10,151 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 12,166 |

**வவுனியா வடக்கு பிரதேச சபைத் தேர்தல் – 2018**

| வட்டார இலக்கம் | வட்டார பெயர் | உள்ளடக்கப் பிரதேசம் (கிராம அலுவலர் பிரிவுகள்) | வெற்றி பெற்ற கட்சி | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|---|
| 1 | கனகராயன்குளம் வடக்கு - மன்னக்குளம் | 225A, 225B | ITAK | 247 |
| 2 | கனகராயன்குளம் தெற்கு | 225 | ITAK | 208 |
| 3 | சின்ன அடம்பன் - நயினாமடு | 223B , 223C | TC | 294 |
| 4 | குளவிசுட்டான் - மாறாஇலுப்பை | 222D, 222E | ITAK | 328 |
| 5 | நெடுங்கேணி | 222, 222A | ITAK | 499 |
| 6 | ஒலுமடு - மாமடு | 222B, 222C | ITAK | 314 |
| 7 | புளியங்குளம் வடக்கு -தெற்கு | 224, 224A | ITAK | 325 |
| 8 | பரந்தன் - அனந்தர் புளியங்குளம் | 223, 223A | ITAK | 295 |
| 9 | ஊஞ்சல்கட்டி - மருதோடை | 221, 221A, 221B | SLPP | 510 |
| 10 | பட்டிக்குடியிருப்பு – கற்குளம் | 221C, 221D | ITAK | 255 |
| 11 | கஜபாபுர-மொணரவெவ | கஜபாபுர இல 9. | SLPP | 321 |
| 12 | கல்யாணபுரம் கிராமம் | கல்யாணபுரம் இல 2 | SLPP | 217 |
| 13 | எத்தாவெட்டுனுவெவ | எத்தாவெட்டுனுவெவ இல 4 | SLPP | 393 |
| 14 | சம்பத்நுவர | நிகவெவ இடது இல 8. பகுதியின் ஒரு பகுதி. மற்றும் நிகவெவதெற்கு இல. 7 | SLPP | 387 |

### 03 வெங்கலச்செட்டிக்குளம் பிரதேச சபை

வெங்கலச்செட்டிக்குளம் பிரதேச சபையில் மொத்தமாக 20 கிராம அலுவலர் பிரிவுகளின் பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இப் பிரதேச சபை 10 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதோடு அவற்றில் ஒன்பது தனி உறுப்பினர் வட்டாரங்களும் ஒன்று இரட்டை உறுப்பினர்கள் வட்டாரமும் ஆகும். வட்டாரங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கை 11 ஆகும்.

வெங்கலச்செட்டிக்குளம் பிரதேச சபையின் விஸ்தீரணம் கிட்டத்தட்ட 409.26 சதுர கிலோ மீற்றர்கள் ஆகும். 2020 ஆம் ஆண்டு சனத் தொகை கிட்டத்தட்ட 33221 பேர். 2018ஆம் ஆண்டு பிரதேச சபைத் தேர்தலுக்குப் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 16 680 ஆகும்.

2018 ஆம் ஆண்டுத் தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (ITAK), ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP), ஐக்கிய தேசியக் கட்சி (UNP), அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (TC), ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP),ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (SLMC), தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF) மற்றும் மக்கள் விடுதலைக் கூட்டணி (JVP) ஆகியன போட்டியிட்டன.

### 04 வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபை

வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபையில் மொத்தமாக 39 கிராம அலுவலர் பிரிவுகளின் பிரதேசங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதில் 31 கிராம அலுவலர் பிரிவுகளின் முழுப் பிரதேசமும் 8 கிராம அலுவலர் பிரிவுகளின் பகுதிப் பிரதேசங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதாவது 214G, 214D, 214A, 214E, 214C, 214F, 244D, மற்றும் 244C ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளின் ஒரு பகுதி வவுனியா (மா)நகர சபைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இப் பிரதேச சபை 13 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதோடு அவற்றில் பத்து தனி உறுப்பினர் வட்டாரங்களும் மூன்று இரட்டை உறுப்பினர்கள் வட்டாரங்களும் ஆகும். வட்டாரங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் எண்ணிக்கை 16 ஆகும்.

(தொடரும்...)

**வெங்கலச்செட்டிக்குளம் பிரதேச சபைத் தேர்தல் – 2018**
**கட்சிகள் பெற்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை**

| உள்ளூராட்சி சபை | வெங்கலச்செட்டிக்குளம் பிரதேச சபை |
|---|---|
| வட்டாரங்களின் எண்ணிக்கை | தனி- 09 பல் – 01 |
| வட்டார உறுப்பினர்கள் எண்ணிக்கை | 11 |
| சபைக்குரிய மொத்த உறுப்பினர்கள் | 19 |

| அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி அல்லது சுயேச்சைக் குழு | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை | சதவீதம் | பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு உரிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | வட்டாரங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேலதிக பட்டியலில் இருந்து நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை | மேன்மிகை உறுப்பினர்கள் எண்ணிக்கை (Over Hang)* |
|---|---|---|---|---|---|---|
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 2,923 | 23.04% | 4 | 3 | 1 | - |
| ஐக்கிய தேசியக் கட்சி | 2,802 | 22.09% | 4 | 2 | 2 | - |
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | 2,671 | 21.05% | 4 | 5 | - | 1 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 2,091 | 16.48% | 3 | 1 | 2 | - |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 1,002 | 7.90% | 1 | - | 1 | - |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 602 | 4.75% | 1 | - | 1 | - |
| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | 453 | 3.57% | 1 | - | 1 | - |
| மக்கள் விடுதலை முன்னணி | 142 | 1.12% | - | - | - | - |
| மொத்தம் | 12,686 | 100% | 18 | 11 | 8 | 1 |

| | |
|---|---|
| செல்லுபடியான மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 12,686 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 211 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை | 12,897 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | 16,680 |

**வெங்கலச்செட்டிக்குளம் பிரதேச சபைத் தேர்தல் – 2018**

| வட்டார இலக்கம் | வட்டார பெயர் | உள்ளடக்கப் பிரதேசம் (கிராம அலுவலர் பிரிவுகள்) | வெற்றி பெற்ற கட்சி | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|---|
| 1 | பெரியதம்பனை - பிரமனாலங்குளம் | 207A, 207C, 207D | ITAK | 274 |
| 2 | ஆண்டியாபுளியங்குளம் (2 அங்கத்தவர்கள்) | 207, 207B | ITAK | 719 |
| 3 | குருக்கள்புதுக்குளம் - கந்தசாமிநகர் | 208A, 208B | SLFP | 326 |
| 4 | பாவற்குளம் | 208C, 208D | ITAK | 293 |
| 5 | சூடுவெந்தபுலவு | 208, 208E | UNP | 871 |
| 6 | பெரியபுளியாலன்குளம் | 211, 211C | SLFP | 553 |
| 7 | முகத்தான்குளம் - செட்டிகுளம் | 211A, 211B, 211E | ITAK | 432 |
| 8 | முதலியார்குளம் – கிறிஸ்தவகுளம் | 210, 211D | SLFP | 300 |
| 9 | நெரியகுளம் | 210B | TULF | 443 |
| 10 | சின்னசிப்பிக்குளம் | 210A | UNP | 439 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெடித்தது...

இந்நிலையில் அவை உண்மைக்குப் புறம்பானவை என பாதுகாப்பு அமைச்சு விளக்கமளித்துள்ளது.

இது குறித்து அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஜனாதிபதியின் யாழ்.விஜயத்தின் போது விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர்கள், விமானங்கள் எதுவும் பயன்படுத்தப்படவில்லை.

மாறாக ஜனாதிபதி செயலகத்துக்குரிய வாகனங்களே பயன்படுத்தப்பட்டன என்றுள்ளது. (ந-7)

## பொதுப் பாது...

செயலாளர் ரேணுகா பெரேரா சமர்ப்பித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, பாராளுமன்ற செயலாளர் நாயகம் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

குறித்த மனுவில், பிரதிவாதியான ஆனந்த விஜேபால பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதியால் கடந்த நவம்பர் மாதம் 18ஆம் திகதி நியமிக்கப்பட்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து கடந்த டிசம்பர் மாதம் 10ஆம் திகதி வெளியான சண்டே ரைம்ஸ்பத்திரிகையில் ஆனந்த விஜேபால ஜனாதிபதியின் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டதாக செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

பின்னர் இது தொடர்பில் தான் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரிக்கை விடுத்த நிலையில் அங்கு அமைச்சர் ஆனந்த விஜேபால ஜனாதிபதியின் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 91ஆவது சரத்தின்படி, அரசாங்க சேவையில் உள்ள ஒருவர் பாராளுமன்றத்தில் அமர்ந்து வாக்களிக்கத் தகுதியற்றவர் என மனுதாரர் கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் தலைமை அதிகாரி பதவி என்பது ஒரு அரசாங்க பதவி என்றும், அதன்படி அமைச்சர் ஆனந்த விஜேபால அத்தகைய பதவியை வகிக்கும் அதேவேளையில் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்கத் தகுதியற்றவர் என்றும் மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ளார். அரசியலமைப்பின்படி அமைச்சர் ஆனந்த விஜேபால பாராளுமன்றத்தில் பதவி வகிக்கத் தகுதியற்றவர் என்று தீர்ப்பளிக்கவும், அவரது பதவியை செல்லாததாக்கும் தீர்மானத்தை எடுக்கவும் மனுதாரர் நீதிமன்றத்தைக் கோரியுள்ளார்.

மேலும், இந்த மனு விசாரிக்கப்பட்டு இறுதி முடிவு அறிவிக்கப்படும் வரை ஆனந்த விஜேபால பாராளுமன்ற உறுப்பினராக அமரவும், பாராளுமன்றத்தில் வாக்களிக்கவும் இடைக்காலத்தடை உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும் என்றும் மனுவில் கோரப்பட்டுள்ளது. (ந-7)

## சுதந்திர தின...

களுக்கான ஏற்பாடுகள் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நல்லாட்சி அரசாங்கத்தின்போது தமிழிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்டிருந்தது.

இதற்குப் பேரினவாதச் செயற்பாட்டாளர்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்ததுடன் இதனால் நாடு பிளவுபடும் என பிரசாரம் மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையிலேயே மீண்டும் தமிழிலும் தேசிய கீதம் இசைக்கப்படும் என அநுர அரசு உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## மன்னார்...

சேர்ந்த 29 வயதுடைய குறித்த சந்தேகநபர் யாழ்ப்பாணம் - பெரியவிளான் பகுதியில் வசித்து வந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் நொச்சிக்குளம் பகுதியில் கடந்த 2022ஆம் ஆண்டு இடம்பெற்ற இரட்டைப் படுகொலை தொடர்பான வழக்கு விசாரணைகளுக்காக சென்ற சந்தேக நபர்கள் மூவர் உள்ளடங்கலாக நான்கு நபர்கள் மீது மன்னார் நீதிமன்றத்திற்கு முன்வைத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது இருவர் உயிரிழந்ததுடன் மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் இராணுவத்துடன் தொடர்புடைய மூவர் உள்ளடங்கலாக ஐவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் விசேட அதிரடிப்படை மற்றும் யாழ்ப்பாணப் பொலிஸார், புலனாய்வுப் பிரிவினரால் குறித்த சந்தேக நபர் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மன்னார் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதுடன் அவரிடம் வாக்குமூலம் பெறுவதற்கான நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ந-7,285)

## எழுவருக்கு...

தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸாரால் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் இதற்கான தடையுத்தரவு பெறப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான இராசமாணிக்கம் சாணக்கியன், ஞானமுத்து சிறிநேசன், இளைய தம்பி சிறிநாத், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் அ.அமலநாயகி, சிவில் சமூக செயற்பாட்டாளர் இ.செல்வகுமார் உள்ளிட்ட எழுவருக்கு இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி, தமிழர்களுக்கான உரிமையினை வலியுறுத்தி சுதந்திர தினத்தினை கறுப்பு நாளாக அறிவித்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் வடகிழக்கில் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

அதன் ஒரு கட்டமாக இன்று மட்டக்களப்பில் பேரணிக்கும் போராட்டத்திற்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அதேநேரம், சுதந்திர தினத்தை முன்னிட்டு இன்று மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இதனைப் பாதிக்கும் வகையிலான எந்தவொரு செயற்பாடுகளுக்கும் மட்டக்களப்பு நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் அனுமதியளிக்கக்கூடாது எனக் கோரி மட்டக்களப்பு தலைமையக பொலிஸாரால் நீதவான் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

குறித்த அறிக்கையை ஆராய்ந்த நீதவான் இந்தத் தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளார். (ந-7)

## போதை...

பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அதன் பொறுப்பதிகாரி அழகியவண்ண தலைமையிலான பொலிஸ் குழுவினர் வவுனியா, பெரியார்குளம் பகுதியில் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின்போது 50 போதை மாத்திரைகள் இளைஞர் ஒருவரிடம் இருந்து மீட்கப்பட்டது. இதனையடுத்து பிரஸ்தாப இளைஞர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யபட்டவர் வவுனியா பெரியார் குளம் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய நபராவார்.

மேலதிக விசாரணைகளின் பின் குறித்த இளைஞரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகபொலிஸார் தெரிவித்தனர். (ந-7)


மஹஜன சம்பத
திகதி 2025.02.03
சீட்டிழுப்பு இலக்கம் 5736
A 6 8 9 1 8 7
அத சம்பத
A 9 1 8 7
சீட்டிழுப்பு இலக்கம் 311
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.02.03
சீட்டிழுப்பு இலக்கம் - 1766
W 27 40 59 77 W
Double Chance 02748

மெகா பவர்
திகதி 03/02/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2084
X 19 10 45 50 59

ஜய JAYA
திகதி 2025.02.03
சீட்டிழுப்பு இலக்கம் 0004
V 2 9 1 5

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3978
சீட்டிழுப்பு திகதி 03.02.2025
G 02 09 60 77 G

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.02.03
சீட்டிழுப்பு இலக்கம் 1045
மீனம் 14 34 35 51 மீனம்
50946 22

உத்தியோகபூர்வ முடிவுகள்
03.02.2025 வெற்றி வாரம் 444
N 8 1 0 4 4 4
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.30,409,187.60
89705
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2710
சீட்டிழுப்பு திகதி 2025.02.03 தினம் திங்கட்கிழமை
16 18 25 65 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.83,936,304.00
DLB

சனிதா
திகதி 03.02.2025 வெற்றி வாரம் 4871
24 25 36 53 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,126,378.40
55827
DLB

ஜயோதா Jayoda
திகதி 2025.02.03 வெற்றி வாரம் 2100
17 18 26 68 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 27,656,678.80
DLB

சீட்டிழுப்பு வாரம் 4422
சீட்டிழுப்பு திகதி 03.02.2025 தினம் திங்கட்கிழமை
27 30 39 46
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.9,084,798.40
236578
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
R 38 34 35 40 70
1886
03.02.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.564,085,815.60
DLB

திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2536
சீட்டிழுப்பு திகதி : 2025.02.03
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,444,742.40
ADA KOTIPATHI
02 15 39 73 V
582450
DLB


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## CANADA VISA

- 100% உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.
- Swiss Visa
- France Visa
- German Visa
- Norway Visa
- அனைத்து நாடுகளுக்குமான விசா சேவைகள் மிகக் குறைந்த செலவில்

(C-2191)

**Exponet Overseas consultant**

No-125, Arasady Road,
Jaffna.

071 415 0995
021 435 5113



## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் பலாலி றோட் ஊரெழுவில் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 23 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- பலாலி றோட் ஊரெழுப் பிள்ளையார் கோவில் வடக்கு வீதியில் இருந்து 300 m
- பலாலி புன்னாலைக்கட்டுவன் சந்தியில் இருந்து சுன்னாகம் செல்லும் பிரதான வீதியில் இருந்து 300 m இருவழிப் பாதை கொண்டது.
- நல்ல தண்ணீர் ஊற்று, சிவப்பு மண், நல்ல சூழல், வீடுகள் அமைப்பதற்கு நல்ல அமைவிடம்.

தொடர்புகளுக்கு :

077 623 4204
076 755 8606

(3320)


## பிரபல வர்த்தகர் தேசமான்ய கென் பாலேந்திரா காலமானார்



யாழ்ப்பாணம் - இணுவிலைப் பிறப்பிடமாகக்கொண்ட ஜோன் கீல்ஸ் குழுமத்தின் முதலாவது இலங்கைத் தலைவரான தேசமான்ய கந்தையா கென் பாலேந்திரா தமது 84ஆவது வயதில் காலமானார்.

கென் பாலேந்திரா இந்த நாட்டின் வணிக உலகில் ஒரு மைல் கல் என்று விவரிக்கத்தக்க வணிகத் தலைவராவார். ஜோன் கீல்ஸ் குழுமத்தின் தலைவராக இருந்த காலத்தில், கென் பாலேந்திரா அதன் அனைத்துக் கட்டுப்பாட்டு நிறுவனங்களின் தலைவராகவும் பணியாற்றினார்.

அத்துடன் சிலோன் டொபாகோ கம்பெனி, பிரெண்டிக்ஸ், யூனியன் அஷ்யூரன்ஸ் உள்ளிட்ட பல நிறுவனங்களில் தலைவர் மற்றும் இயக்குநர் பதவிகளை வகித்துள்ளதுடன், இலங்கை வர்த்தக சபையின் முன்னாள் தலைவராகவும் (1998 - 2000) கடமையாற்றியுள்ளார்.

யாழ்ப்பாணம் - இணுவிலில் பிறந்த கென் பாலேந்திரா, கொள்ளுப்பிட்டிப் பகுதியில் வசித்து வந்தார். அவர் கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவராவார். கென் பாலேந்திரா தனது பாடசாலை நாட்களில் ரக்பி வீரராகவும் திறமைகளை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)


## VACANCY - வேலைவாய்ப்பு

**WALK IN INTERVIEW**

அரச நிறுவனம் ஒன்றுக்கான பின்வரும் பதவிகளுக்காக நேர்முகத் தேர்வு யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 07.02.2025 வெள்ளிக்கிழமை காலை 9.00 - 12.00 மணி வரை இடம்பெறவுள்ளது. சுயவிபரக் கோவையுடன் சமூகமளித்தல் வேண்டும்.

**பதவிகள்**

- நிர்வாக அலுவலர் - பெண்
- இணைப்பாளர்கள் - ஆண்/ பெண்
- விடுதி பராமரிப்பாளர் - பெண்

வயது : 25 - 35
சம்பளம் : ரூபாய் 25000/= இலிருந்து

(3318)

தொடர்பு : 077 570 4893



## வீடு வாடகைக்கு

யாழ். சுண்டிக்குளி றக்கா ஒழுங்கை (Rakka Lane), ஜோன் பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில் 4 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
076 485 8020

(3316)



## நம்பினால் நம்புங்கள்

அதிசயம் ஆனால் உண்மை உங்கள் எதிர்கால வாழ்க்கை துல்லியமாக (காண்டம்) கணித்துத் தரப்படும். ஜனன ஜாதகம் எழுதித் தரப்படும்.

**காயத்திரி திருமண சேவை**

கன்னாதிட்டி சிவன் கோயில் முன்பாக ரூபி விலாஸ்

076 314 4689,
076 008 6961, 077 844 9861

(3317)



## விற்பனைக்கு

**போன் கேபிள் சார்ஜர் பவர்பாங் கேஷ் ரெம்பர் கிளாஸ் விற்பனைக்கு உண்டு.**

தொடர்புகளுக்கு :
076 927 2886

(810)


## மரண அறிவித்தல்

தோற்றம்
01
-
08
-
1958



மறைவு
02
-
02
-
2025

### தர்மலிங்கம் சாந்தகுமார்(குமார்)

6ம் வட்டாரம் மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் இல.42,5ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தினை வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் சாந்தகுமார் அவர்கள் (02.02.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - மனோன்மணி தம்பதியினரின் மகனும் காலஞ்சென்ற கந்தசாமி - சிவபாக்கியம் தம்பதியினரின் மருமகனும் நந்தகலா அவர்களின் அன்புக் கணவரும் நிரூஜா, நிரோஜன், நிலக்சன், நிதர்சனா ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்தினி, சுவேதினி, நந்தகுமார், ஜெயக்குமார், றஜனி, பாமினி, விஜயகுமார் ஆகியோரின் சகோதரரும் ராம்தாஸ் அவர்களின் அன்பு மாமனாரும் கஸ்விகா, சாயித் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.42, 5ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாண இல்லத்தில் இன்று (04.02.2025) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல.42, 5 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்

(3312)


## மொத்தக் கொள்வனவுகள்

மொத்தக் கொள்வனவு, டெலிவரிகள் வடமராட்சி சில்லறை கடைகளிற்கு பொருட்கள் கொள்வனவுகள், இலவச Home டெலிவரிகளினை Happy Supermarket உரும்பிராயினூடாகப் பெற்றுக் கொள்ளலாம்.

**Happy Supermarket - உரும்பிராய்**
076 800 6500/ 077 780 8030

(811)



**V2 VISA SERVICES**

**கனடா**

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்திய Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-2510)



## கொக்குவிலில் வீட்டுடன் காணி விற்பனைக்கு

கொக்குவில் மேற்குப் பகுதியில் 1 ½ பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. மற்றும் வீடுகள், காணிகள் விற்பதற்கும் வாங்குவதற்கும் நாட வேண்டியது.

**"Easy Real Estate"**

076 742 4301, 075 710 9639

(3314)


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 06.01.2025 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் பாலன் தருமராசா



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 05.02.2025 நாளை புதன்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் அன்றைய தினம் பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெற இருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

ஜனசக்தி வீதி,
சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.

இங்ஙனம் : குடும்பத்தினர்
077 124 6251

(808)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்றெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.